பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 26 வியாழக்கிழமை 12.10.2017 கதிர் 340

தெற்கில் சீரற்ற காலநிலை

கொழும்பு,ஒக்.12

கொழும்புஉட்படத்தென்னிலங்கையின் பல பகுதிகளில் நேற்று இடியுடன் கூடிய கடும் மழையும் மித மிஞ்சிய காற்றும் காணப்பட்டன. கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்க முடியாத இரு விமானங்கள் மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்துக்குத் திருப்பி விடப்பட்டன.

இடைக்கால அறிக்கையில் போதுமான தெளிவில்லை

யாழ். பல்கலை கலந்துரையாடலில் கருத்து; ஒற்றையாட்சி முறைமையே பிரஸ்தாபிப்பாம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கையில் தமிழர்களுக்கு திருப்தி தரக்கூடிய ஏற்பாடுகள் தெளிவாக இல்லை. தெளிவான - திட்டமான - வடிவத்தை அந்த அரசமைப்பு நகல் பெற்ற பின்னரே அது பற்றி விவரமான கருத்து நிலைப்பாட்டை தமிழ் மக்கள் எடுக்க முடியும். எனினும், ஒற்றையாட்சிக்கு வெளியே வரும் ஏற்பாடுகள் இன்னும் தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அங்கு நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு கருத்து வெளியிடப்பட்டது.

பக்கம் 18 »»

தமிழ் கைதிகள் விரைவாக விடுதலை அதுதான் அரசின் நிலைப்பாடாம்!

அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகின்றார்

கொழும்பு,ஒக்.12

சிறையில்உள்ளதமிழ் கைதிகள் விரைவாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய கைதிகள் தவிர்ந்த ஏனை

பக்கம் 18 »»

அளப்பு அருணாசலம்

கணக்கெடுப்பு இரகசியமாக நடத்துவினமோ...!

நாளை மறுதினம் மைத்திரி வருகை; புறக்கணிப்பதா என நாளை முடிவு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரும் இலங்கைஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவுக்கு எவ்விதமான எதிர்ப்பை வெளியிடுவது என்பது குறித்துநாளைவெள்ளிக்கிழமை காலை வடமாகாண ஆளுநர் அலுவலக முற்றுகையின் போது முடிவெடுக்கப்படுமென தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகள் விடயத்தில் நாளை வெள்ளிக்கிழமைக்குள் ஆக்க

பக்கம் 18 »»

யாழில் பல நிகழ்வுகளில் சனியன்று ஜனாதிபதி

(எஸ்.நிதர்ஷன்)

நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி காலை 9 மணிக்கு விசேட விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடையவுள்ளார்.

பக்கம் 18 »»

யோகேஸ்வரன் எம்.பியுடன் மட்டு.காணி அதிகாரி முறுகல்



மட்டக்களப்பு, ஒக்.12

மட்டக்களப்ப மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனுக்கும், மட்டக்களப்பு மாவட்டக் காணி உதவி ஆணையாளர் விமலுக்கும் இடையில் எம்.பியின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் கடும் வாக்கு வாதம்நடைபெற்றுள்ளது.

அப்போதுஏற்பட்டகளே

பக்கம் 18 »»

பொலிஸாருக்குப் பரிச்சயமானோரே போதைப்பொருள் கடத்தல்களில்!

மாவை எம்.பி. அதிரடிக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.12

பொலிஸாருக்கு நன்கு பரிச்சயமானவர்களே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர்என வும் அவர்கள் தொடர்பாக பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும்எடுப்பதில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

பக்கம் 18 »»

நாமலைச் சந்திப்பதற்காக சிறைக்கு எதிரணி எம்.பிக்கள் படையெடுப்பு!

கொழும்பு, ஒக்.12

கூட்டு எதிரணியின் நாடாளுமன்றஉறுப்பினர்கள் சிலர், தங்காலை சிறைச்சாலையில் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோரைச் சந்தித்தனர்.

அம்பாந்தோட்டையில், நீதிமன்றத் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஆறு பேர் விளக்க மறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற

பக்கம் 18 »»

கடலில் மிதந்து வந்த 150 கிலோ கேரள கஞ்சா!

கடற்படையினர் மீட்டனர்

(எஸ்.நிதர்ஷன்)

காங்கேசன்துறைக்கு வடகிழக்கே எட்டரை கடல் மைல்தூரத்தில்3பொலித்தீன் சாக்குகளுக்குள் 44 பொதிகளில் கட்டப்பட்ட நிலையில்மிதந்துகொண்டிருந்தசுமார் 153.7 கிலோ கேரள கஞ்சாவை இலங்கைக் கடற்படையின்ரோந்துக் கப்பல் நேற்றுப் பிற

பக்கம் 18 »»

தேசிய பாடசாலைகளில் இன்று 3000 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக்.12

அரச தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இன்று இடமாற்றம்வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் அதிபர்களிடம் இன்று கையளிக்கப்படவுள்ளன என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரே பாடசாலையில்

பக்கம் 18 »»

ரயில் சாரதிகள் நேற்று திடீர் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஒக்.12

ரயில்வே சாரதிகள், பாதுகாவலர்கள் நேற்று மாலை திடீரென பணி நிறுத்தத்தில் ஈடுபட்டமையினால் கொழும்பு கோட்டையிலிருந்து ஆரம்பிக்கும் சகல ரயில் சேவைகளும் நேற்று ரத்துச் செய்யப்பட்டன.

இதனால் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் திரண்டிருந்த பயணிகள் பெரும் அமளி துமளியில் ஈடுபட்டனர்.

பக்கம் 18 »»

பாலியல் தொழிலாளர்கள் குறித்துக் கணக்கெடுப்பு!

கொழும்பு,ஒக்.12

பாலியல் தொழிலாளிகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட உள்ளது. தேசிய பால் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவினால் இது தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டில்

பக்கம் 18 »»

காலைக்கதிர் Kalaikkathir

வறட்சி நிவாரணம் புறக்கணிப்பு வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஒக். 12

அரசால்வழங்கப்படும்வறட்சி நிவாரணத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கும் வரட்சி நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்து வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்ஒன்றைமேற்கொண்டனர்.

வவுனியா பிரதேச செயலக வாயில் முன்பாக காலை 8.30 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்த தோணிக்கல், தேக்கவத்தை கிராம மக்கள், பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு வருகைதந்த போது தமக்கு பதில்தந்துவிட்டு செல்லுமாறு வாயிலை மறித்து ஆர்ப்பாட்டம்செய்தனர். இதனையடுத்து அந்தப் பகுதிக் கிராம அலுவலரை அழைத்த பிரதேச செயலாளர், மக்களுக்கு ஏன் வறட்சிநிவாரணம்வழங்கப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துமாறு கோரினார். அத்துடன், மக்கள் சார்பாக மூவரை அழைத்து அலுவலகத்தில் இது தொடர்பிலும் பேசியிருந்தார்.

இருப்பினும் அப்பேச்சுக்களில் திருப்தியடையாத மக்கள், பிரதேச செயலகத்தில் இருந்து ஊர்வலமாக மாவட்ட செயலகத்தை அடைந்து அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இதன்போது மாவட்ட செயலக வாயிலை மக்கள் மறிக்க முற்பட்டனர். அதன்போது சம்பவஇடத்துக்கு வந்த பொலிஸார், மக்களுடன் பேசி அவர்களைச் சமரசம் செய்திருந்தனர்.

அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார, இது தொடர்பில் விசாரணை செய்து நாளைய தினம் பதில் வழங்குவார் எனத் தெரிவித்தமையையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், தமது கிராமத்தில் வறுமையால் பாதிக்கப்பட்டவர்கள், 70 இற்கும் மேற்பட்ட விதவைக் குடும்பங்கள் எனப் பலர் இருந்தும் வறட்சி நிவாரணம் தமக்கு வழங்கப்படவில்லை எனவும், அயல் கிராமங்களில் பரவலாக வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டபோதும் தமது கிராமத்துக்கு பாரபட்சம்காட்டப்பட்டுள்ளது எனவும், கிராம அலுவலரை உடனடியாக இடமாற்றுமாறும் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் கிராம அலுவலரைக்கேட்டபோது, வவுனியாவில் அதிக சனத்தொகை கொண்ட கிராமமாகத் தமது பிரிவே உள்ளது எனவும், தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபத்துக்கு அமைவாக 8 குடும்பங்களுக்கு மட்டுமேவறட்சிநிவாரணம்வழங்கமுடியும். அதனையே தான் செய்தார் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'மனச்சாட்சி இல்லாத உத்தியோகத்தரே உன் மனம் என்ன கல்லா?, தேக்கவத்தை மக்கள் என்ன பகடைக்காய்களா?, அயல் கிராமங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் எமது கிராமத்துக்கு ஏன் வழங்கப்படவில்லை?, அரக்க குணம் கொண்ட கிராம சேவையாளரே ஊரை விட்டு வெளியேறு!, தோணிக்கல் கிராம அலுவலரே பதில் கூறு?' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

(க-100)

அதிக வருமானம் சேர்த்த அஞ்சல் சேவையாளர்!

வவுனியா, ஒக். 12

வடக்குமாகாணத்தில் அதிகவருமானம்சேர்த்த அஞ்சல் சேவையாளராக வவுனியா தபால் நிலையஊழியர்ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பொலன்நறுவையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற தேசிய உலக அஞ்சல் தின நிகழ்வின் போதே இவர் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த வகையில், வவுனியாதபாலகத்தில் கடமையாற்றும் எஸ். மனோகரன் என்ற தபால் உத்தியோகத்தரே வடக்கு மாகாண மட்டத்தில் அதிக வருமானம் சேர்த்த அஞ்சல் சேவையாளராகத் தெரிவுசெய்யப்பட்டு முதல்நிலை விருதைப் பெற்றுள்ளார்.(க-100)

வவுனியாவில் விதையிடல் கருவி மூலம் சிறு தானியச் செய்கைக்கு ஏற்பாடுகள்!

வவுனியா, ஒக். 12

மாகாண விவசாயத் திணைக்களம் மிக இலகுவான முறையில் நான்கு சில்லு உழவு இயந்திரத்துடன் பொருத்தி சிறுதானியங்கள் விதையிடல் மேற்கொள்ளக் கூடிய இயந்திரத்தை வவுனியா மாவட்டத்தில்அறிமுகம்செய்துள்ளது.

இந்த உபகரணம் மூலம் ஒரே நேரத்தில் விதைகளுடன் அடிக்கட்டு பசளை சேர்க்கப்பட்டு, ஒரு நாளைக்கு 6 ஏக்கர் பரப்பளவில் வரிசைகளில் விதையிடல் மேற்கொள்ள முடியும்.

மேற்படிநடவடிக்கை, ஓமந்தை, உலுக்குளம், பம்பைமடு ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குரிய பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மேலும் வவுனியா அரச விதை உற்பத்தி பண்ணையிலும் இந்தச் சேவை இடம்பெற்று வருகின்றது.

ஓர் ஏக்கர் பரப்பளவில் விதையிடுவதற்கு கட்டணமாக ரூபா இரண்டாயிரம் அறவிடப்படுகின்றது.

இந்த உபகரணத்தைப் பயன்படுத்துவதால் விவசாயிகளுக்கு கூலியாட் செலவு குறைவு, பயிரிடைவெளி சரியான முறையில் பேணப்படல், களை கட்டுப்படுத்தும் இயந்திரம் மூலமான களை கட்டுப்பாடு மேற்கொள்ளல் இலகு, ஒப்பீட்டளவில் இந்த நிலப்பரப்பில் இருந்துகிடைக்கும் விளைச்சல் அதிகம், குறைந்தளவு விதைத் தேவை, நோய் பீடைகளின் தாக்கம் குறைவாகக் காணப்படும் எனவும் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன், மேலதிக விவரங்களைத் தங்களது பிரிவு விவசாய போதனாசிரியர்களிடம் பெற்றுக் கொள்ள முடியம் என வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(க-100)

தமிழ்க் கூட்டமைப்பின் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர்

ஊர்காவற்றுறை சந்திப்பில் டக்ளஸ் தெரிவிப்பு

ஊர்காவற்றுறை, ஒக்.12

மக்களுக்கு ஒளிமயமான எதிர் காலத்தைப் பெற்றுக்கொடுப்பது மட்டுமன்றி அரசியல் பலத்தை தமக்கு தரும் பட்சத்தில் மக்களின் தேவைகள் யாவும் உரியமுறை யில் நிறைவேற்றப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை சின்னமடப் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

இன்றுள்ள சூழ்நிலையில் ஏனைய தமிழ் அரசியல் தலை மைகள் தேர்தல் காலத்தில் வழங் கிய வாக்குறுதிகளை நிறைவேற் றாது ஏமாற்றமளித்துள்ள நிலை யில், அவர்கள் மீதான நம்பிக் கையை மக்கள் இழந்துள்ளனர். குறிப்பாக தேர்தல் காலங் களில் தமது வெற்றியை மட்டும் இலக்காகக்கொண்டு மக்களிடம் சென்ற தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினர் நடைமுறைப்படுத் தப்படமுடியாத பல்வேறு வாக் குறுதிகளை வழங்கியிருந்தனர்.

அவர்களது உணர்ச்சிப் பேச் சுக்களாலும் உசுப்பேற்றல்களா லும் கவரப்பட்ட மக்கள், அவர் களுக்குத் தமது வாக்குகளை வழங்கியிருந்தனர். இருந்தபோதி லும், மக்களின் வாக்குகளை வாரிச்சுருட்டிஅபகரித்துக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுகபோக வாழ்க்கையை மட்டும் அனுபவித்துக்கொண்டு தங்களை நட்டாற்றில் விட்டுள்ள னர் என்றே மக்கள் உணர்ந்து கொள்ளுகின்றனர்.

அந்தவகையில் எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் சந்தர்ப் பங்களை மக்கள் உரியமுறை யில் பயன்படுத்தி எமக்கு அரசி யல் பலத்தை தருவார்களேயா னால் ஒளிமயமான, வளமான எதிர்காலத்தை நாம் பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி உட்கட்டு மானம் உள்ளிட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் எம் மால் உரிய முறையில் முன்னெ டுக்கமுடியும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றறேன்.

அந்தந்த கிராமங்களில் கிடைக்கப்பெறுகின்ற உள்ளூர் வளங்களை பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் களை வளர்த்தெடுத்து அதனூ டாக மக்களின் வாழ்வாதாரத்தை யும் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கான செயற்திட் டங்களையும் மேற்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைக்கு சென் றிருந்த டக்ளஸ் தேவானந்தா நாரந்தனை தெற்கு, சூரியா வத்தை, ஊர்காவற்றுறை மேற்கு பகுதிஉள்ளிட்டகிராமங்களுக்குச் சென்று மக்களது தேவைப் பாடுகளை அறிந்துகொண்டது டன், சமகால அரசியல் நிலை வரங்கள் தொடர்பாகவும் தெளிவு படுத்தினார்.

கட்சியின் யாழ்.மாவட்ட நிர் வாகச் செயலாளர் கா.வேலும் மயிலும் குகேந்திரன், கட்சியின் யாழ்.மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் சிவகுரு பாலகிருஷ் ணன், கட்சியின்ஊர்காவற்றுறை பிரதேச நிர்வாகச் செயலாளர் ஜெயகாந்தன் ஆகியோரும் உடனிருந்தனர். (உ)

இலங்கை ஆசிரியர் சங்கமும் கடையடைப்புக்கு முழு ஆதரவு

மாணவர்களை வீதிக்கு இறங்காமலிருக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.12

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள வடமாகாணம் தழுவியமுழுமையானகதவடைப் புக்கு இலங்கை ஆசிரியர் சங் கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகஅந்தஅமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:–

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தமிழ் மக்களின் அரசி யலாகவே நோக்கப்படவேண் டும். தமிழ் மக்களின் அபிலாசை களோடு இணைந்திருந்தவர் களுக்குஅநீதிநடைபெறும் போது அவர் களுக்காகக் குரல் கொடுப் பது என்பது தமிழ் மக்களின் பெரும் பொறுப்பாகும்.

தேசியப்பிரச்சினைக்குஉளத் தூய்மையுடன் தீர்வைமுன் வைக்க விரும்பும் அரசாங்கம் முதலில்அரசியல்கைதிகள்அத் தனை பேரையும் அரசியல் ரீதி யாகதீர்மானம்எடுத்துவிடுதலை செய்யவேண்டும்.

இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை என்பதும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் தான் இருக்கின்றார்கள் எனவும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஊடாகத்தான் இவர்களுக்கு தண்டனை கொடுத்து விடுதலை செய்யலாம் என்பதும் அரசின் இனவாத நோக்கிலமைந்த பழி வாங்கல் நிகழ்ச்சி நிரலாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத் தின்கீழ்கைதுசெய்யப்பட்டுஇலங் கையின் சிறைகளில்பல ஆண்டு களாகப்பெரும் இன்னல்களுக்கு மத்தியிலும் உளவியல் பிரச்சி னைகளுக்கு மத்தியிலும், நடைப் பிணமாகத்தமிழ் அரசியல் கைதி கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் விடுதலை தொடர் பில் எவ்வித ஆக்கபூர்வமான நட வடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.தங்கள்விடுதலைக்காகப் பல தடவைகள் சாத்வீக ரீதியில் உண்ணாவிரதப் போராட்டங் களை தமிழ் அரசியல் கைதிகள் முன்னெடுத்தனர். நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு எனக் கூறும்அர சாங்கம் இந்த அரசியல் கைதி கள்விவகாரத்தைப்பயங்கரவாதத் தோடு தொடர்புபட்ட பிரச்சினை யாக மட்டுமே பார்க்கின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு உண்மையான தீர்வு காணப்பட வேண்டுமாயின், தமிழ் இனத் தின் அடக்குமுறைக்கெதிராக போராடியவர்களை முதலில் அரசியல் ரீதியான தீர்மானம் எடுத்து அனைவரையும் விடு தலை செய்திருக்க வேண்டும். கடந்த ஆட்சியில் அரசியல் கைதி களாக இருந்த 12,000 பேரை விடுவிக்க முடிந்ததென்றால் நல்லிணக்கம் எனவும்நல்லாட்சி எனவும் கூறும் தற்போதைய அரசால் தற்போது அரசியல் கைதிகளாக உள்ள 132 பேரை மட்டும் ஏன் விடுவிக்கமுடிய வில்லை? இது பேரினவாதத் தின் அடக்குமுறையின் பழிவாங் கல் நோக்கமே என்பது தெளி வாகின்றது.

இந்த நிலையில் –

(1) தமது வழக்குகளை மீண் டும் தமிழ் பிரதேச நீதிமன்றங் களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து சிறையில் சாகும் வரை உண வுத் துறப்பு போராட்டத்தில் ஈடு பட்டிருக்கும்தமிழ் அரசியல் கைதி கள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும் –

(2) முழுத் தமிழ் அரசியல் கைதிகளையும் ஓர் அரசியல் தீர்மானத்தினூடாக விடுவிக்கு மாறு அரசாங்கத்தை வலியுறுத் தியும் –

13.10.2017 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கதவடைப்புப் போராட்டத்தில் –

பாடசாலைச் செயற்பாடு களும் ஸ்தம்பிக்க ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஆளுநர் செயல கம் முன்பாக இடம்பெறவுள்ள கவனவீர்ப்பிலும் ஆசிரியர்கள் கலந்துதமது சமூகப் பொறுப்பை வெளிப்படுத்தவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுக்கின்றது.

அன்றைய தினம் மாணவர் கள் தொடர்பாகப் பெற்றோர் களை அக்கறை செலுத்துமாறும் மாணவர்களைவீதிகளுக்குஅனுப் பாது பாதுகாப்பாக வீடுகளில் வைத்துப் பொறுப்பாக செயற் படுமாறும் இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொள்கின்றது. – என்று உள்ளது.

செய்திக்குறிப்பு

உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக் கைகளுக்கு ஆதரவு தெரிவித்து நாளை 13.10.2017 வட மாகாணம் தழுவிய ரீதியில் பூரண கதவடைப்புக்கும், காலை 9.30 மணிக்கு வட மாகாண ஆளுநர் செயலகம் முன் நடை பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கும் வடக்கில் உள்ள பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தமது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை நாளைய கதவடைப்பு மற்றும் கவனவீர்ப்பு போராட்டங்களுக்கு தமிழ் மக்கள் அனைவரும் தமது பங்களிப் பினை நல்கி அரசியல் கைதிகளுக்கான தார்மீக ஆதரவினை வெளிப்படுத்த முன்வருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த பொது அமைப்புக்கள் சார்பாக

அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை; புறந்தள்ள முடியாதவை

யாழ். வணிகர் கழகம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.12

உண்ணாவிரதப் போராட்டத் தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதி களின் கோரிக்கைகள் நியாய மானவையும், புறந்தள்ள முடி யாதவையுமாகும் என்று யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் வணிகர் கழகத்தின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

போரினால்சொல்லொணாத் துன்பங்களுக்கும் அழிவுகளுக் கும் உள்ளான இந்த நாட்டின் தமிழ் மக்கள் தங்களது பாதிப்புக் களில் இருந்து புதிய நல்லாட்சி தங்களை மீட்டெடுக்கும் என்று திடமாக நம்பியே தங்கள் வாக்கு களை இந்த நல்லாட்சிக்காக அள்ளி வழங்கியிருந்தனர். ஆனால் தமிழ் மக்களின் அளப் பெரிய ஆதரவுடன் பதவிக்கு வந்துள்ள இந்த நல்லாட்சி அரசு தமிழ் மக்களின் மீட்சிக்காக ஆற் றிய பணிகள் மக்களை திருப்திப் படுத்தவில்லை என்பது மட்டு மன்றிஎந்தவொருபிரச்சினையை யும் அது முற்றுமுழுதாக தீர்த்து வைக்கவில்லைஎன்பதும்கவலை தரும் விடயங்களாகும்.

மக்களின் நியாயமான பிரச் சினைகளுக்கும் அரசியல் வர் ணம் பூசப்பட்டு தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றநிலைமை களையே உணரமுடிகின்றது. இந்த அரசு பதவிக்குவந்து இரண் டரை ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் அரசியல் கைதிகளை விடுவிப்பதிலோ, காணாமல்ஆக் கப்பட்டவர்கள் விடயத்திலோ, தனியார் காணிகளை இராணு வத்திடமிருந்து விடுவிக்கும் நடவடிக்கைகளிலோ திருப்தி யளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது மிகவும்கவலையளிப்பனவாகும்.

வவுனியாவிலுள்ள நீதி மன் றங்களில் சாட்சிகளை முன் னிலைப்படுத்துவதில் பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதாகக்கூறி தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை வவுனியா நீதிமன் றத்தில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றியதோடு கைதிகளை அனுராதபுரம் சிறை களில்அடைத்துவைத்துள்ளமை நியாயமான செயல் எனக் கூற முடியாது.

எனவே இந்த நல்லாட்சி அர சாங்கம் இது விடயத்தில் இனி யும் இழுத்தடிப்புக்களை மேற் கொள்ள முடியாது. உடனடியாக இந்த அரசியல்கைதிகள்விடுவிக் கப்பட வேண்டும். இல்லையேல் அவர்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டங்களில் உள்ள நீதிமன் றங்களில் அவர்களைப் பாரப் படுத்த வேண்டும்.

இக்கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் எமது மக்களின் நியாயமான போராட்டங்கள் மற் றும்கவனவீர்ப்புநிகழ்வுகள்எவை யும் யாராலும் புறந்தள்ளிவிட முடியாதவை என்பதுதான் யாழ். வணிகர் கழகத்தின் நிலைப்படா கும்.

எனவே எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி யின் யாழ். வருகைக்கு முன் இக் கைதிகளின் விடுதலைக்கு நல்ல ஒரு பதில்ஜனாதிபதியிடம் இருந்து கிடைக்க வேண்டும் என ஒட்டு மொத்த யாழ். சமூகமே எதிர்பார்க் கின்றது. – என்றுள்ளது. (இ)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

அரசியல் கைதிகள் விவகாரம்

நாளைமறுதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ்த் தேசிய தின விழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வருகின்றார். அவருடன் பெரிய அரசுப் பட்டாளமே யாழ். வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். வருகை தருவதற்கு முதல் நாள் இங்கு ஒரு முழு அளவிலான கடையடைப்புக்கும், அன்றைய தினம் காலையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடபகுதியிலிருந்து செயற்படும் ஆளுநரின் செயலகம் முன் ஒன்றுகூடவும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அழைப்பை 19 இற்கும் மேற்பட்ட பிரபலமான பொது அமைப்புகள் ஒன்று சேர்ந்து வெளியிட்டிருக்கின்றமையாலும் -

அந்த அமைப்புகள் கையில் எடுத்திருக்கும் அரசியல் கைதிகளின் விடயம் தமிழர்களைப் பொறுத்தவரை மிக உணர்வு பூர்வமான விடயம் என்பதாலும் -

இந்தக் கடையடைப்பு பூரண வெற்றி பெறும் என்று இப்போதே ஆரூடம் கூறமுடியும்.

இந்த விவகாரத்தை ஒட்டி அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் இணைந்து நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் ஒரு பிரதான விடயம் ஆழமாக இழையோடி இருந்தமையைக் காணமுடிந்தது. அல்லது அந்த அறிக்கையை வாசிக்கும் போது அதனை உணர்ந்து கொள்ள முடிந்தது.

அது, இந்த அரசியல் கைதிகள் விவகாரத்தில் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தமக்குரிய அதிகாரத்தை - பலத்தை - வலுவை - சரியாகப் பயன்படுத்தவேயில்லை. மெத்தனமாகவே நடந்து கொண்டனர் என்ற ஆழமான அதிருப்தி அந்த அறிக்கையில் பதிந்து - பொதிந்து - கிடந்தது.

அறிக்கையை வெளியிட்ட அரசியல் கட்சிகள் பலவும் இன்று தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை அதிகம் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கில் அதிருப்தி கொண்டவை. தமிழ் மக்கள் பேரவை போன்ற பல பொது அமைப்புகளின் அரசியல் கருத்து நிலைப்பாடும் அதுவே.

அத்தகைய தரப்புகளிடமிருந்து கூட்டமைப்பின் போக்கை விமர்சிக்கும் - அது குறித்து அதிருப்தி தெரிவிக்கும் - கருத்தே வரும் என்று கூற வாளாவிருந்து விட முடியாது.

அந்தத் தரப்புகள் சுட்டிக்காட்டியிருக்கும் இந்த விடயத்தில் ஆழமான சில கருத்து நிலைப்பாடுகள் உள்ளன.

அரசியல் கைதி ஒருவரின் - அல்லது ஒரு சாதாரண கைதி ஒருவரின் - வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றும் விடயத்தில் சிபாரிசு செய்யும் அதிகாரம் சட்டமா அதிபருக்கே உரியது. அதில் ஜனாதிபதியோ வேறு ஓர் அரசியல்வாதியோ நேரடியாகத் தலையிட்டு உரிய வழிகாட்டலை சட்டமா அதிபருக்கு வழங்க வேண்டும் என்று கோருகின்றமையும், வற்புறுத்துகின்றமையும் சுயாதீன நீதி விசாரணை முறைமையில் தலையிடுவதாகவே அர்த்தப்படுத்தப்படலாம். ஆகவே, அந்தக் கோரிக்கையைப் பகிரங்கமாக முன்வைப்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

ஆனால், சாட்சிகளுக்குப் பயம், அச்சப்படுகிறார்கள் என்ற காரணம் இருக்குமானால் அதற்கு உரிய பாதுகாப்பை அரசு தரும் என்ற உறுதிமொழியை சட்டமா அதிபருக்கு அரசுத் தலைமை வழங்கலாம். அதுவே சரியானது.

ஆனால், ஒட்டுமொத்த அரசியல் கைதிகள் விடயம் எவ்வாறு அணுகப்படவேண்டும் என்பதைப் பொது அமைப்புகளின் அறிக்கை கனகச்சிதமாகக் கோடிட்டுக் காட்டுகின்றது.

"தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு என்பது தற்போது சட்டரீதியான விடயம் என்பதைக் கடந்துவிட்டது. அது நியாயத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டிய விடயமாகிவிட்டது. அரசியல் தீர்மானத்தின் ஊடாக முடிவெடுக்கப்பட வேண்டிய அடிப்படையான பிரச்சினை என்ற பரிமாணத்தை அடைந்து விட்டது.

"போரின் இறுதிநாள் வரை ஆயுதங்களைத் தாங்கிப் போராடிய பல மூத்த போராளிகள் உட்பட - 12 ஆயிரம் முன்னாள் புலிகளைக் குறுகிய காலத் தடுப்புக்குப் பின்னர் விடுவித்துவிட்டு வெறும் 132 பேரை மட்டும் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது எந்தவித சட்ட அர்த்தமும் இல்லாத செயற்பாடு" - என்ற சாரப்பட அந்த அறிக்கை கூறுவது முற்றிலும் சரியே.

இது சட்டத்தின் ஆட்சி என்ற பெயரில் - நீதியின் நாமத்தில் - நடக்கும் கேலிக்கூத்தன்று வேறில்லை.

ஆகவே, ஓர் அரசியல் தீர்மானத்தின் மூலம், இந்த அரசியல் கைதிகள் அனைவரையும் - ஏற்கனவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தண்டனை அனுபவிப்பவர்களையும் - சேர்த்து ஒட்டுமொத்தமாகப் பொது மன்னிப்பு அளித்து விடுவிப்பதே சரியானதாகும்.

ஆனால், அப்படிக் கோருவதிலும் ஓர் ஆபத்து உள்ளது.

தமிழர் தரப்பில் ஆயுதப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் மன்னிப்பளித்து விடுவித்து விட்டால், மறு தரப்பில் ஆயுதப் படையினர் தரப்பிலும் அத்தகைய குற்றமிழைத்தோர் அனைவருக்கும் அதே பொது மன்னிப்பும், விடுவிப்பும் ஒட்டுமொத்தமாக அறிவிக்கப்படவேண்டும் என்று கொழும்பு முடிவெடுக்கலாம்.

அப்படித் தீர்மானித்தால் பொறுப்புக் கூறல் பொறிமுறை அம்போதான். எனவே, இந்தக் கோரிக்கையை முன்வைக்க முன்னர், அரசியல்கட்சிகள், பொது அமைப்புகள் ஒன்றுக்கு இரண்டு தரம் சிந்திப்பது நல்லது. அவே பொருத்தமானதும் ஆகும்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டத்திற்கு கடன்களை வழங்க பின்லாந்து நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நன்கொடைகளையும், சலுகை கடனுதவிகளையும் வழங்க பின்லாந்து அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் பின்லாந்து வெளிவிவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான பின்லாந்து ஒத்துழைப்பு நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இலங்கைக்கும், பின்லாந்துக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விஜயம் உதவியாக அமைந்தது என்று பின்லாந்தின் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மீக்கா லின்ட்லா தெரிவித்துள்ளார்.

பின்லாந்து தொழில்முயற்சியாளர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களை இலங்கைக்கு வழங்கவும் இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கும் என அவர் கூறினார். இலங்கைக்கும், பின்லாந்துக்கும் இடையில் டிஜிற்றல்மயமாக்கம் தொடர்பான ஒப்பந்தமும் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதேவேளை, பின்லாந்தின் கைத்தொழில் சம்மேளனம் இலங்கையின் முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் கூடுதலாக தொடர்புபடவும் விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழல் உருவாகி வருவதாக சம்மேளனம் அறிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் இந்தப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். (க)

வடக்கில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க விரைவாக நடவடிக்கை

அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவிப்பு

கொழும்பு, ஒக்.12

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் விரைவாக கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதுவரை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த காணிகளில் 62 சதவீதமானவை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன என்றும் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிலும் சமீபத்தில் பேசப்பட்டது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் இருந்துவருவதாக குறை தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் இரண்டு வருடங்களிற்குள் முடிவிற்குகொண்டுவருவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார். (க)

அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு பதில் பணிப்பாளர் நாயகம் நியமனம்!

கொழும்பு, ஒக்.12

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன அரசாங்க தகவல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக இந்தத் தகவலை தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு நிரந்தர பணிப்பாளர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)

உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஒப்பசி - 2017

மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகள் எவை?
– மார்பக அளவுகளில் அண்மைக் காலத்தில் ஏற்படும் மாறுபாடு.
– மார்பக வெளித் தோற்றத்தில் மாற்றம் ஏற்படல்.
– மார்பகத்தில் கட்டி அல்லது வீக்கம் ஏற்படல்.
– மார்பகத்தில் உட்குழிவு அல்லது சிறு பள்ளங்கள் ஏற்படல்.
– மார்பகத் தோல் தோடம்பழத் தோலின் தோற்றம் போல் மாறுதலடைந்து இருத்தல்.
– முலைக் காம்பினூடாக திரவம் வெளியேறுதல்.
– முலைக் காம்பு உள்வாங்கப்படல்.
– முலைக் காம்பின் தோற்றம் மாற்றமடைதல்.
– அக்குள் அல்லது கழுத்தில் நிணணீர் குடிச்சுகள் வீங்கிக் காணப்படல்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

நாளை
13.10.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : புனர்பூசம் மு.ப. 11.29 வரை
திதி : அட்டமி மு.ப. 8.16 வரை

சுபநேரம் : 6.02 – 7.32 வரை
இராகுகாலம்: 10.32 – 12.02 வரை

இலங்கையின் ஜனநாயக மறுசீரமைப்பை பாராட்டும் பின்லாந்து பிரதமர் ஜுஹா!

கொழும்பு, ஒக். 12

இணக்கப்பாட்டு தேசிய அரசின் கீழ் இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஜன நாயக மறுசீரமைப்பை பின் லாந்து பிரதமர் ஜுஹா சிபிலா பாராட்டியுள்ளார்.

பின்லாந்து நாடு சுதந்திர மடைந்து 100 வருடங்கள் நிறைவடையும் வேளையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டுக்கு விஜயம் செய் துள்ளமை இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவு மேலும் வலுவடைவதற்கான வரலாற்று ரீதியான சந்தர்ப்ப மாக அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹெல்சிங்கி நகரில் பிரத மரின் உத்தியோகபூர்வ இல் லத்தில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவை நேற்று முன் தினம் அவர் சந்தித்தவேளை யிலேயே இந்த விடயங் களைக் குறிப்பிட்டார்.

இருநாட்டுப்பிரதமர்களுக்கு இடையில் இருதரப்பு பேச்சு இதன்போது இடம்பெற்றது. இதன்போது கல்வி, சுகாதாரம், நிலைபேறான எரிசக்தி, டிஜிற் றல்மயம், தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம் உள்ளிட்டபல் வேறு துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் தொழில் துறை மறுசீரமைப்புத் தொடர் பாக பின்லாந்தின் அனுபவங் களைப் பரிமாறிக்கொள்வது தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

பிராந்திய சமாதானம் மற்றும் பாதுகாப்புக்காக மேற்கொள் ளப்பட வேண்டிய நடவடிக் கைகள் பற்றியும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டன.

இலங்கை சுதந்திரமடைந்து 70வருடங்கள்நிறைவடையும் அடுத்த வருடத்தில் இலங் கைக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பின்லாந்து பிரதமர் ஜுஹா சிபி லாவுக்கு அழைப்பு விடுத்தார்.

பின்லாந்தின் எரிசக்தி தயா ரிப்பு தொழில்நுட்பத்தை இலங்கைக்கு வழங்குவது தொடர்பிலும் பல்வேறு வர்த் தகங்களுக்காக முதலீடு மற் றும்நிவாரணவட்டியின்கீழான கடனை வழங்குவதற்கும் உடன்படுவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பின்லாந்து பிரதமர் ஜுஹா சிபிலாவுக்கு தனது நன்றி யைத் தெரிவித்தார் (க)

சீனாவின் நேச நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

கொழும்பு, ஒக். 12

சீனாவுடன் இணைந்து செயற்படும்போது ஒவ் வொரு நேசநாடுகளும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அமெ ரிக்கக் கடற்படையின் உயர் மட்ட அதிகாரியான றியர்அட்மிரல்டொனால்ட் டி கப்ரியேல்சன் கூறியுள் ளார்.

பிராந்தியத்தில் - குறிப் பாக இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை பற்றி அமெரிக்கா கவலை கொண்டுள்ளதா என்று இலங்கை வந்துள்ள றியர் அட்மிரல் மொனால்ட் டி கப்ரியேல்சனிடம் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளித்த அவர், சில விடயங்களில் சீனா வெளிப்படைத்தன்மையுடன் செயற்படாததால், சீனாவுடன் இணைந்து செயற்படும் போது ஒவ் வொரு நாடும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சீனா தற்போது நன்மைகளை பெற்றுக் கொண் டிருக்கும் அமைப்பு முறையை மறுசீரமைக்க முயல்கிறது. இது கவலையளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் நாடு முழுவதும் இந்திய அம்புலன்ஸ் சேவை!

அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

இந்திய அம்புலன்ஸ் சேவை அடுத்த வருடம் முதல் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்படும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தி யத்துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள் ளார்.

இலங்கை மன்றக் கல்லூரி யில் நடைபெற்ற பாடசாலை மற் றும் சுகாதார வைத்திய அதிகாரி கள் பிரிவுகளுக்கு முதன் முறை யாக உபகரணங்களை வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்ட போது அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன இந்த விட யங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நாட்டில் சேவை யில் ஈடுபட்டுள்ள அம்புலன்ஸ் களின் எண்ணிக்கை 88 ஆகும். மேலும் 250 அம்புலன்ஸ்கள்

வழங்கப்பட இருக்கின்றன.

இதற்குத் தேவையான ஒத்து ழைப்பு வழங்கப்படுமென்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக விமா னம் மற்றும் தரைமார்க்கமாக அனர்த்தங்களின் போதும் சேவை கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இதற்காக 24 ஹெலிக்கொப் டர்களும் 1025 அம்புலன்ஸ் களும், அனர்த்தங்களின் போது செயற்படக்கூடிய 24 வாகனங் களையும் ஜேர்மனியின்ஸ்ரெய்கர் அமைப்பின் அவசர விபத்துச் சேவை வழங்குவதற்கு உறுதி தெரிவித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு ஜனாதிபதி மைத்திரி அன்பளிப்பு!

கொழும்பு, ஒக். 12

வரலாற்றில் முதல் முறை யாக கலேவல கல்வி வலயத் தின் பஹல திக்கல ஆரம்ப பாடசாலையில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந் துள்ள மாணவி பி.டி.துலாஞ் சலி மதுமாலி பிரேமரத்ன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத் தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் மாணவியின் திறமையைப் பாராட்டிய ஜனாதிபதி, அவ ரது உயர்கல்வி நடவடிக் கைகள் நிறைவடையும்வரை

மாதாந்தம் ரூ. 3,000 வழங்கவும் உறுதி

மாதாந்தம் 3 ஆயிரம் ரூபாவை வழங்கப்படும் என உறுதி யளித்துள்ளார்.

தந்தையை இழந்து உரிய வீட்டு வசதியுமின்றி மிகுந்த பொருளாதாரகஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் துலாஞ்சலி மதுமாலி 168 புள்ளிகளைப்பெற்று 05 ஆம் ஆண்டு புலமைப்பரி சில் பரீட்சையில் இம்முறை சித்தியடைந்துள்ளார்.

துலாஞ்சலி மதுமாலி என்ற மாணவிக்குபுதியவீடொன்றை அமைத்துக் கொடுக்க இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியிடம் உறுதி அளித்துள்ளார்.

மாணவி துலாஞ்சலி மது மாலிக்கு ஒரு வருடத்திற்குத் தேவையான பாடசாலை அப் பியாசப் புத்தகங்கள் மற்றும் பரிசில்களையும் ஜனாதிபதி இதன்போது வழங்கியுள்ளார்.

பஹல திக்கல ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 45 வருடங்கள் ஆகின்றன. தற்போது பாடசாலையில் 96 மாணவர்கள் உள்ளனர். இந் தப்பாடசாலை வரலாற்றில் புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த ஒரேயொரு மாணவி பி.டி.துலாஞ்சலி மதுமாலி என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த சந்திப்பில் பாடசாலை அதிபர் சோமசிறி அத்த நாயக்க, கலேவெல வலயக் கல்விப் பணிப்பாளர் நயோமி ஹெட்டியாரச்சி, துலாஞ்சலி மதுமாலி பிரேமரத்னவின் தாயார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

அரசை ஆட்சிக் கட்டில் ஏற்றியதில் எமக்கும் பொறுப்பிருக்கின்றது

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 12

நல்லாட்சி அரசை ஆட்சிக்கு கொண்டுவந்ததில் எமக்கு பெரிய பொறுப்பிருக்கின்றது என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கவீந்திரன்கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையிலே, நாங்கள் இப்போதும்சிலவிடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்து அந்த அரசுக்கு பக்க பலமாக இருந்து வருகின்றோம் எனக் கூறியுள்ளார்.

2016ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் 41 மாணவர்களினதும் மற்றும் அவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர்களினதும் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலை சிசிலியா மேரி அரங்கில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் செபமாலை சந்தியாகு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசை ஆட்சிக்குக் கொண்டுவந்ததில் எமக்கு பெரிய பொறுப்பிருக்கின்றது. அந்தவகையிலே நாங்கள் இப்போதும் சில விடயங்களைபெற்றுக்கொள்வதற்காக பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்து அந்த அரசுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றோம். இந்த நல்லாட்சியைக் கொண்டு நடத்த வேண்டிய கடப்பாடு எங்கள் ஒவ் வொருவரிடமும் இருக்கின்றது.

கடந்த கால காட்டாட்சியில் எமது மக்கள் பல இன்னல்களைச் சந்தித்திருக்கின்றார்கள். அதேபோன்ற துன்பங்களை எமது மக்கள் இனி ஒரு காலத்திலும் அனுபவிக்கக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். நாம் தற்போது பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதன் மூலமே எதிர்காலத்தில்அதிகாரத்துடன் கூடிய எமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதனையே எமது கட்சி தற்போது கடைப்பிடித்துவருகின்றது. தெற்காசியாவிலே சிறந்த ஒரு திட்டத்தைத் தற்போது கல்வி அமைச்சு மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்திருக்கின்றது.

இந்த நல்லாட்சியில் இவ்வாறான காப்புறுதித் திட்டங்கள் மாணவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்யவிருக்கின்றது.

அதாவது, ஏழை எளிய மாணவர்கள் தங்களது கல்வியை மேம்படுத்திச் செல்வதற்காக இவ்வாறான காப்புறுதித் திட்டங்கள் மாணவர்களுக்கு உந்து சக்தியாக அமையவிருக்கின்றன.

இன்று நல்லாட்சி அரசில் இந்தநாட்டிலே மாறிமாறி ஆட்சிக்கு வந்த இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களே இருக்கின்றார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாங்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டு எமது உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபடவேண்டும்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கார்மேல் பற்றிமா கல்லூரி தமிழர்களின் இதயமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதனைக் கட்டிக்காத்து வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவரிடத்திலும் வர வேண்டும்.

ஆண்டு தோறும் அதிகளவான மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புகின்ற ஒரு பெரிய நிறுவனமாக இந்த நிறுவனம் இயங்கிக் கொண்டு வருகின்றது. ஆரம்ப காலத்திலே இங்கு அதிபர்களாக இருந்தவர்கள் இந்தக் கல்லூரியை உலகம் பேசக் கூடிய விதத்தில் கொண்டுவந்திருந்தார்கள்.

அதே நிலைப்பாடுதான் தற்போது அதிபராகப் பொறுப்பேற்று இருப்பவரும் செய்வார் என்பதில் எமக்கெந்த சந்தேகமும் இல்லை. அதற்காக வேண்டி நாங்கள் ஒவ்வொருவரும் பாடுபட்டு உழைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், தொழில் வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளருமான பீ.இளங்கோமற்றும்களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கிருஷ்ணகுமார், அருட்சகோதரர் ஜோசப் டொமினிக், கல்லூரி பிரதி அதிபர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(க)

மட்டக்களப்பில் நண்டு நகரம்!

மட்டக்களப்பு, ஒக். 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்தில் நண்டு நகரம் என நண்டு வளர்ப்பை ஊக்குவிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கிராமிய பொருளாதார பிரதி அமைச்சர் அமீர் அலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கு அமைய தேசிய உணவு உற்பத்திக்கான எழுச்சி வாரத்தை முன்னிட்டு மீனவர் புரட்சி தினம் ஓட்டமாவடி மீறாவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத் தலைமையில் இடம் பெற்றஇந்தநிகழ்வில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாகரையில் 250 ஏக்கர் நிலப் பரப்

பைக் கொண்டு நண்டு நகரம் எனும் திட்டம் இலங்கை தேசிய நீர்வாழ் அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

எதிர்காலத்தில் புதுவகையான திட்டங்களை மட்டக்களப்பு மாவட்டத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

நாம் ஒவ்வொருவரும் செய்கின்ற தொழில்களை நவீன முறையில் முன்னேற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு அதில் வெற்றி காண்பவர்களாக மாறுவோமாக இருந்தால் எமது அமைச்சின் மூலமும் பல்வேறு பட்ட உதவிகளை வழங்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(க)

அனைவருக்கும் சமமான கல்வி; ஓட்டமாவடியில் கருத்தரங்கு!

மட்டக்களப்பு, ஒக். 12

2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பத்துடன் கூடிய சிறப்பான கல்வி உறுதி செய்தல் எனும் தொனிப்பொருளிலான முழு நேரக் கருத்தரங்கு ஓட்டமாவடியில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கு இலங்கைக்கான கல்வி அபிவிருத்திக் கூட்டமைப்பின் மாவட்ட இணைப்பாளர் சமாதான நீதிவான் எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையில் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். அத்துடன், கருத்தரங்கு தொடர்பான செயற்பாடுகளும் நடத்தப்பட்டுள்ளன.

நிலையான அபிவிருத்தி குறிக்கோளின் கீழ் கல்வித்துறையின் 4 ஆவது இலக்கை அடைவதற்காக சிவில் சமூகத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல் தொடர்பாக பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவூட்டும் முகமாக இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக நல அமைப்புக்களின் பிரதிநிதிகள் சபையின் புதிய நிர்வாக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, அதனூடாக கல்வித்துறையின் 4 ஆவது இலக்கை அடைவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதாக மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஐ.எம்.கபீர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி!

கொழும்பு, ஒக். 12

2017-2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு செய்துள்ளது.

உலக பொருளாதார கண்ணோட்டம் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை நேற்றுமுன்தினம் வொஷிங்டனில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, உலகப் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 3.6 வீதமாகவும், 2018 ஆம் ஆண்டில் 3.7 வீதமாகவும் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடுமையான பொருளாதார நெருக்கடி எதிர்கொள்ளப்பட்ட 2016 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார வளர்ச்சி 3.2 வீதமாக இருந்தது.

அதேவேளை, இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.7 வீதமாக நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் இருக்கும் என்றும் சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது.

இது, 2018ஆம் ஆண்டில் 4.8 வீதமாக அதிகரிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மதிப்பீடு

இயற்கை அழிவுகள் மற்றும் பின்தங்கிய சீர்திருத்தங்களால், இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 4.5 வீதத்துக்குக் குறைவாகவே இருக்கும் என்று இலங்கை மத்திய வங்கியின் கணிப்புக்கு மாறாக இந்தக் கணிப்பு அமைந்துள்ளது.

எனினும், தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பீடு செய்யும் போது, இலங்கை பின்தங்கிய நிலையில் உள்ளது.

2017இல் 6.7 வீதமாக உள்ள இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2018இல் 7.4 வீதமாக அதிகரிக்கும் என்றும் சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது.

பாகிஸ்தானில், இந்த ஆண்டு 5.3 வீதமும், அடுத்த ஆண்டில் 5.6 வீதமும் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. பங்களாதேஷ் இந்த ஆண்டில் 7.1 வீத பொருளாதார வளர்ச்சியுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் முதலிடத்தில் உள்ளது.

(க)

நாமல் உள்ளிட்ட ஆறு பேருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஒக். 12

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் எதிர்ப்புப்பேரணி தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ , டீ.வீ.சானக, பிரசன்ன ரணவீர உள்ளிட்ட 6 பேர் நேற்றுமுன்தினம் மாலை அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியிருந்தனர்.

இந்தநிலையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ , டீ.வீ. சானக, பிரசன்ன ரணவீர, உபாலி கெடிகார , சம்பத் அத்துக்கோரள மற்றும் அஜித் பிரசன்ன உள்ளிட்ட 6 பேரும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

இதையடுத்து கைதுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேரையும் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தியமையை அடுத்து 6 பேரையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவுடன் பிரெஞ்சு கூட்டுப்படைத் தளபதி சந்திப்பு!

கொழும்பு, ஒக். 12

இந்தியப் பெருங்கடலில் நிலைகொண்டுள்ள பிரெஞ்சுப் படைகளின் கூட்டுத் தளபதி றியர் அட்மிரல் டிடியர் பியாட்டன் (Rear Admiral Didier Piaton) இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பரஸ்பர ஈடுபாடுள்ள, இரு தரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர் ஜீன் மார்ட்டின் சூவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

கொழும்பில் நடந்த காலி கலந்துரையாடல் என்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்க, பிரெஞ்சுப் படைகளின் கூட்டுத் தளபதி றியர் அட்மிரல் டிடியர் பியாட்டன் சிறிலங்கா வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

யாழ்ப்பாணத்தில் பொது அமர்வில் பங்கேற்கும் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்!

கொழும்பு, ஒக். 12

உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் நாளை யாழ்ப்பாணத்தில் பொது அமர்வு ஒன்றில் பங்கேற்கவுள்ளார்.

ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் 13 நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இவர் இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக மீளாய்வு செய்து, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளார்.

ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப், நாளை யாழ்ப்பாணத்துக்கு வரத் திட்டமிட்டுள்ளார். அங்கு அவர், பொது அமர்வு ஒன்றில் உரையாற்ற உள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தங்கியிருக்கும் போது, இவர் பல்வேறு தரப்புகளையும் சந்தித்துக் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்ளவுள்ளார்.

(க)

2018 இல் பூர்த்தி செய்யப்படவுள்ள கண்டி மக்களின் குடிதண்ணீர் தேவை!

கொழும்பு, ஒக். 12

கண்டி மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இரண்டு திட்டங்கள் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூவ் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் 56 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப் படவுள்ளது. இதற்கமைவாகக் குண்டசாலை ஹாரகம, நீர்த்திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 23 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் கீழ் நன்மையடைவோரின் எண்ணிக்கை சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேராவர். கண்டி நீர்த்திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள நிதி 33 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும். இதன் கீழ் 4 லட்சத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் பயனடையவுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ். அறிவுத் திருக்கோயில் ஆண்டு விழாவையொட்டி ஞாயிறன்று சிறப்பு நிகழ்வுகள்

யாழ். அறிவுத்திருக்கோயில் ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாண அறிவுத்திருக்கோயில் மனவளக் கலை மன்ற அறக்கட்டளையின் தலைவர், மனவளக்கலைப் பேரா சிரியர் சி.முருகானந்தவேல் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். வர வேற்புரையை மனவளக்கலைப் பேராசிரியர் வே.பாஸ்கரன், வாழ்த்துரையை இலங்கை மனவளக் கலைமன்ற அறக்கட்டளை தலைவர் பேராசிரியர் அ.மதுரைவீரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ள னர்.

சிறப்புரையை தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்களான இ.ஜேயபால், பேராசிரியர் ச.இந்திரா ஆகியோர் நிகழ்த்துவர். சிறப்புச் சொற்பொழிவை சொல்வேந்தர் சுகிசிவம் ஆற்றுவார். நன்றியுரையை மனவளக் கலை துணைப் பேராசிரியர் த.நந்த குமரன் நிகழ்த்துவார். நிகழ்ச்சிகளை யாழ். அறக்கட்டளையின் செயலாளர் இ.இந்திரகுமார் தொகுத்து வழங்குவார். (இ)

தினசரி ராசி பலன் 12.10.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை. ஸப்தமித்திதி காலை 6.56 மணிவரை. அதன்மேல் அஷ்டமி பி.இ.4.59 மணிவரை. பின்னர் நவமி. நட்சத்திரம் திருவா திரை காலை 8.56 மணிவரை. பின்னர் புனர்பூசம். மரணயோகம் காலை 8.56 மணிவரை. பின்னர் சுபயோகம்.

ராகுகாலம் - *பகல் 1.26 மணிமுதல் 2.55 மணிவரை.*
சுபநேரம் - *காலை 7.32 மணிமுதல் 9.02 மணிவரை.*
திவசம்செய்ய வேண்டியதிதி- *புரட்டாதிமாத தேய்பிறை ஸப்தமி.*
பிறந்த நட்சத்திர வழிபாடு: *மிருகசீரிடம்.*

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம் : விருத்தியான நாள். பொருளாதாரம் மேம் படும். வியாபாரம் நன்கு விருத்தியடையும். பெண்கள் சுயதொழிலில் விருத்தியடைவார்கள். மாணவர்களுக் குக் கல்வி ஊக்கம் அதிகரிக்கும்.

ரிஷபம்: நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முனைவார் கள். உத்தியோக மேன்மை உண்டாகும். உயர் அதி காரிகளின் நன்மதிப்புக் கிடைக்கும்.

மிதுனம்: மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்ற மடையும். நினைத்தகாரியம் நடக்கும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதற்கு அரச உதவிப்பணம் கிடைக்கும். வியாபாரம் நல்ல முன்னேற்றமடையும்.

கடகம்: சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலி வடையும். உடல்நலக்கோளாறு உண்டாகும். உற வினர்களால் வீண்தொல்லைகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

சிம்மம்: உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் தாராளமாகப் புழங்கும். வியாபாரத்தில் எதிர் பாராத லாபம் உண்டாகும். மாணவர்களுக்கு தடைப் பட்ட உயர்கல்வி தொடரும்.

கன்னி: சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் இருப்பினும், செலவுகள் அளவுக்கதிகமா கும். தேகசுகம், குடும்ப சுகம் ஓரளவு சீராக இருக்கும். வெளிநாட்டு வர்த்தகத்தால் நன்மை உண்டாகும்.

துலாம் : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். சுயதொழில் வருமானம் பெருகும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்தபடி உயர்வு கள் கிடைக்கும்.

விருச்சிகம்: தீமையான நாள். வருமானம் குறையும். சுயதொழிலில் பிறரால் பல இடையூறுகள் உண்டாகும். வழக்கமாக பாதகமான முடிவைத் தரும். சொத்துகள் கைவிட்டுப் போகும் நிலை உண்டாகும்.

தனுசு: சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளா தாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். பயணங்களாலும் தேவையற்ற செலவுகள் உண்டா கும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும்.

மகரம் : யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த பொருள்கள் விற்றுத் தீரும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். திருமணயோகம் உண்டாகும்.

கும்பம்: சுபீட்சமான நாள். பணம் தாராளமாகப் புழங் கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண் டாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். மாண வர்கள் வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமாவார்கள்.

மீனம் : குழப்பமான நாள். பணவரவு குறையும். வீண் செலவுகளும், அலைச்சல்களும் உண்டாகும். உடல்நிலை பாதிப்படையும். தொழிலில் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கவனம் தேவை.

தேசிய விவசாயிகள் வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கு இடையில் புதிர்ப்போட்டி!

தேசிய விவசாயிகள் வாரத்தை முன்னிட்டு வவுனி யாவில் மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் வவு னியா தெற்கு கல்வி வலயத் துடன் இணைந்து கடந்த 6, 10 மற்றும் 17 ஆம் திகதிகளில் விவசாய புதிர்ப்போட்டிக் கான எழுத்து பரீட்சைகள் நடைபெற்றுள்ளன.

இதில் வவுனியா தெற்கு வலயத்தின் க.பொ.த உயர் தரத்தில் விவசாய பாடநெறி கற்பிக்கும் ஏழு பாடசாலையை சேர்ந்த 32 மாணவ, மாணவி களுக்கு இடையே பாடசாலை மட்டப் போட்டி நடத்தப்பட் டுள்ளது.

இதன்போது பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட முதல் மூன்று மாணவர் களுக்கு பாராட்டிச் சான்றிதழ் கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து தெரி வான பாடசாலை மட்டப் போட்டியாளர்களுக்கு இடை யில் விநாடி வினாப் போட்டி கள் நடத்தப்பட்டு மூன்று பாடசாலைகள் அரை இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகின.

இறுதிச்சுற்றில் வவுனியா இறம்பைக்குளம் ம.வி, வவு னியா செட்டிகுளம் ம.வி ஆகி யன போட்டியிட்டு அதில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் வெற்றியீட்டியுள்ளது.

வலயமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளிற்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டுள் ளன.

இறுதிச்சுற்றில் போட்டி யிட்ட பத்து மாணவிகளுக்கு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் நினைவு பரிசாக பழ மரக்கன்றுகள் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

மேலும், இந்தச் செயற்பாடு விவசாயம் கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு புதிய உத் வேகத்தை வழங்குவதுடன், அவர்களிடையே சூழல் தொடர்பான பற்றுதலை ஏற்படுத்துவதாகவும் அமை கின்றது எனக் குறிப்பிடப்படு கின்றது.

அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பொலிஸார் முல்லைத்தீவில் வெகுமதியுடன் கௌரவிப்பு

ஒட்டுசுட்டான், ஒக். 12

அர்ப்பணிப்புடன் பணி ஆற்றிய பொலிஸாரைக்கௌர விக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நடை பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த கந்தேவத்த தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ் வில் முல்லைதீவு - கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிகன்ன சிறப்பு அதிதியாகக் கலந்து

கொண்டார்.

மேலும், கடந்தகாலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட பல்வேறு குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத் துவதற்கு பொலிஸ் நிலை யங்களின் கீழ் பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்பட் டுள்ளனர்.

இவ்வாறு செயலாற்றிய பொலிஸ் உறுப்பினர்கள் வெகுமதிகள் வழங்கிக் கௌர விக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(க)

சிவில் அமைப்புக்களுடனான தகவல் உரிமை கலந்துரையாடல்!

தகவல் உரிமை தொடர்பாக தேசிய ரீதியில் பணியாற்றும் சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் நிதி மற்றும் ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தியும் திட்டமிடலும்) திருமதி திலகா ஜயசுந்தர தலைமையில் நடை பெற்றுள்ளது.

ஊடக அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வை நிதி மற்றும் ஊடக அமைச்சின் தகவல் உரிமைப் பிரிவு, தகவலுக்கான உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத் துவது தொடர்பில் கலந்துரை யாடுவதற்கு ஏற்பாடுசெய் தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் தகவல் உரிமை தொடர்பான பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 20 சிவில் அமைப்புக்கள் கலந்து கொண் டிருந்தன.

யாழ். ரத்னா விருது, கலைத்துறை சான்றிதழ்: கலைஞர், எழுத்தாளர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாண பிரதேச கலா சாரப் பேரவையால் வழங்கப் படுகின்ற விருதான யாழ். ரத்னா விருது 2017 இற்கு இலக்கியம் மற்றும் எழுத்துத் துறை நாடகம், இசைநாடகம், நாட்டுக்கூத்து, நாட்டியம், சங்கீதம், இசை (வயலின், வீணை), ஓவியம், சிற்பம், உலோகக் கலை, ஏனையவை ஆகிய துறைகளில் கலைப் பணியாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

60 வயது பூர்த்தியடைந்த இதுவரை யாழ். ரத்னா விரு தைப் பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கலைஞர்கள் விண் ணப்பிக்க முடியும்.

அத்துடன், கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப் பங்களும் மேற்படித் துறை களில் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வய துக்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன் யாழ்ப்பாண பிரதேசத்தை நிரந்தர வதிவிட மாகக் கொண்ட கலைஞர்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப் பங்களைப் பெற்றுக்கொண்டு பூரணப்படுத்திய விண்ணப் பத்துடன் கோரப்பட்ட ஆவ ணங்களுடன் உரிய கலைத் துறை சார்ந்த விண்ணப்பங் களுடனும் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் விண் ணப்பிக்க முடியுமென பிரதேச செயலரும் கலாசாரப் பேர வைத் தலைவருமான பொன் னம்பலம்தயானந்தன் அறிவித் துள்ளார். (இ)

புலமைப் பரிசில் பரீட்சை:

சித்தியடைந்தோர் பதிவு செய்யலாம்

குருநகர், ஒக். 12

இந்த வருடம் நடை பெற்று முடிந்த தரம் 5 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களைப் பதிவு செய்யும் நட வடிக்கை யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பிரதேசத்தில் நடை பெற்று வருகின்றது.

அந்த வகையில், யாழ். குருநகர் பிரதேசத்தின் ஜே/68, ஜே/69, ஜே/70, ஜே/71, ஜே/72 ஆகிய கிராமசேவகர் பிரிவுக்குட் பட்ட பகுதிகளில் சித்தி அடைந்த மாணவர்களின் விவரங்களை யாழ். குருநகர் சனசமூக நிலையத்தில் பதிவு செய்யுமாறு குருநகர் மக்கள் முன்னேற்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சீகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சீதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்தூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

123

அத்தியாயம் - VII

சீதன முறைமை

யாழ்ப்பாணத்திலுள்ள சீதன வழக்கு முறைக்கு கடுமையான எதிர்ப்பு நிலவும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால், நான் யாழ்ப்பாணம் சென்று, தமிழ் மக்களோடு கூடிவாழ்ந்த காலத்தில், சீதன நடைமுறைக்குக் கூட்டான பெரும் எதிர்ப்பு நிலவவில்லை எனக் கண்டபோது நான் ஆச்சரியமடைந்தேன். நான் நினைத்ததற்கு மாறாக, சீதன வழக்குப் பற்றி மக்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவின. சிலர், சீதன முறைமையை ஆதரிக்கவும் செய்தார்கள். குறிப்பாகப் படித்த பெண்கள் மட்டத்தில் சீதனத்துக்கு ஆதரவு நிலவியமையைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். சொத்துடைமை படைத்த பெண்களும் சீதன வழக்குக்கு ஆதரவான நிலைப் பாட்டையே எடுத்தனர். குடும்பத்தின் பாரம்பரிய சொத்துடைமைகளே பெண்களுக்கு சீதனமாகப் பராதீனப்படுத்தப் படுகின்றன என்றும், சீதனமுறை அகற்றப்பட்டால் இந்தச் சொத்துரிமையைப் பெண்கள் இழக்க நேரிடும் என்பதும் இவர்களது கருத்து. தங்கள் பெண் பிள்ளைகள் திருமணம் செய்யும் போது, அவர்களுக்கு வீடாக, நிலமாக, நகையாக, பணமாக குடும்பச் சொத்தைப் பகிர்ந்தளிப்பது அல்லது நன்கொடையாக வழங்குவது தமது கடமை என்று பெற்றோர்கள் வாதித்தனர்.

பெற்றோருக்கு உரிய இந்த உரிமையையும், அன்பு வெளிப்பாட்டையும் சட்டமூலமாகப் பறித்துவிடக் கூடாது என்பதும் அவர்களது வாதம். சீதனம் கொடுக்காமல் தமது பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைப்பது இயலாத காரியம் என்பது பெரும்பாலானோரது கருத்து. சீதனம் என்பது தமக்கு உரித்தான பரம்பரைச் சொத்தையே குறிப்பது என்பதால், சீதன முறைமையைத் தடைசெய்து தமது சொத்துரிமையைப் பறிப்பது நியாயமாகாது என்றும் சில பெண்கள் வாதிட்டனர். சீதன வழக்கைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் கூட, சமூகத்தில் ஆழ வேரூன்றி நிற்கும் இந்த நடைமுறையைச் சட்டமூலமாக மட் டும் அழிப்பது மிகவும் கடினம் எனக் கருத்துத் தெரிவித்தனர். சீதன நடைமுறையை ஒழித்துக் கட்டுவதாயின் சமூகத்தின் மன நிலையில் அடிப்படையான மாற்றம் நிகழவேண்டும் என்றும் இவர்கள் வாதித்தனர். சீதனப் பிரச்சினை பற்றிய விவாதம் எழுப்பிய பல ரகமான சர்ச்சைகளும், கருத்துகளும் எனது மனதில் பதியவே செய்தன.

1993 ஆம் ஆண்டு காலப்பொழுதில், மணமகன்களிடம் இருந்தும், அவர்களது குடும்பங்களிடமிருந்தும், பேராசையுடன் மட்டுக்கு மீறிய அளவில், எழுதப்பட்ட சீதனக் கோரிக்கைகள், எத்தனையோ குடும்பங்களைப் பாதித்ததுடன், பெண்களின் வாழ்க்கையையும் சீரழியச் செய்தன. இதனால், சீதனமுறைமை மிகவும் சூடுபிடித்த, சர்ச்சைக்குரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்தது. சீதனக் கொடுமை அழிக்கப்பட வேண்டும் என்று 1992 ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்து மாறும் தமிழ்ப் பெண்கள், விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கை பிரபாகரனிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது, உடன் நடவடிக்கை எடுக்க அவர் முடிவு செய்தார்.

சீதன முறைமை பற்றித் தமிழ் சமூகத்தில் சர்ச்சைக்குரிய பல்வேறு கருத்துகள் உலாவின. அத்தோடு, இந்த வழக்குமுறை யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தில் ஆழமாக வேரூன்றி நிற்கிறது. இந்தப் பிரச்சினையை செம்மையாகக் கையாளாது விட்டால், பெரும் சமூக விளைவுகள் ஏற்படலாம். சட்டம் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டலாம் என்பதில் எனக்கும் பாலாவுக்கும் நம்பிக்கையில்லை. என்னைப் பொறுத்தவரை, சீதனப் பிரச்சினை பற்றிக் கூடுதலான, சரியான தகவல்களையும், ஆழமான அறிவையும் பெறவே நான் விரும்பினேன். சமூகத்தில் ஆழமாக வேரூன்றிக் கிடக்கும் இந்த நடைமுறை தொடர்பாக, புலிகள் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வருவதால், முதலில் பரந்து பட்ட மக்களின் ஆதரவைப் பெறுகின்றமை அவசியமென நாம் கருதினோம்.

மக்களின் ஆதரவு இல்லாதுபோனால், சீதன முறைமையை ஒழித்துக் கட்டுவது கடினம் என்றும், சட்டத்தில் ஓட்டைகளைக் கண்டுபிடித்து நடைமுறை தொடர்வது சாத்தியமென்றும், சட்டம் இறுக்கமாக இருந்தால், அது தலைமறைவாக, இரகசியமாக செயற்படலாமென்றும், நாம் கருதினோம். இறுதியில், சீதனப் பிரச்சினை தொடர்பாகப் பொது மக்களின் கருத்துகளை ஆய்வு செய்வதென்றும், அத்தோடு, இந்தப் பிரச்சினை பற்றிப் பகிரங்க விவாதங்கள் நடத்துவதென்றும் முடிவாயிற்று. இதன் அடிப்படையில், கிராமங்களில், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகத்தில் மற்றும் பொது இடங்களில் எல்லாம் விடுதலைப் புலிகளின் அரசியற் போராளிகள், ஆண்களும், பெண்களுமாகப் பொதுக்கூட்டங்களை

ஒழுங்குசெய்து அவற்றில் பங்குகொண்டனர். இந்தப் பொதுக்கூட்டங்களில் எமது போராளிகள் சீதனவழக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன், பரந்துபட்ட பொதுமக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்தனர். சீதனம் தொடர்பாகப் பொது சன சர்ச்சையைத் தூண்டிவிடும் நோக்கில், புனைபெயரில் பாலா ஒரு கட்டுரையை எழுதினார். ஆனால், அதற்குப் பதில் ஒருவரும் எழுதவில்லை. இதனை அடுத்து, பல புனைபெயர்களில், சீதன வழக்குக்கு ஆதரவாகவும், எதிராகவும் பல கட்டுரைகளைப் பாலாவே எழுதி, ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரித்தார். ஆனால், பத்திரிகை விவாதத்தில், வாசகர்கள் கருத்துத் தெரிவிக்கத் தயங்கியமையால், அந்த முயற்சி பிசுபிசுத்துப் போனது.

சீதன நடைமுறையின் சமூகச் சிக்கல்கள் பற்றி சரியான, ஆழமான அறிவைப் பெறும் நோக்கத்தோடு, சமூகவியல் ஆய்வு ஒன்றை நடத்தவும் இயக்கம் முடிவு எடுத்தது. இந்த ஆய்வுக்கான கேள்விக் கோவையும் தயாரிக்கப்பட்டது. இந்தக் கேள்விகளின் அடிப்படையில் தரவுகள் பெறுவதற்காகப் பெண் போராளிகள் வடமாகாணம் முழுவதற்கும் அனுப்பப்பட்டனர். இந்த ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களையும் ஆராய்ந்து தீர்வுகளைத் தீர்மானிக்கவும் திட்டமிடப்பட்டது. இதற்குப் பிறகு சீதன வழக்கு முறையைத் தடைசெய்யும் புதிய சட்டங்களை உருவாக்கி, அவற்றை பொதுமக்களிடம் விவாதத்துக்கு விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இது ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சீதன வழக்கின் மூலவேர்பற்றியும், அதன் இயங்குமுறை பற்றியும் ஆய்வு செய்து அறிய நான் முடிவெடுத்தேன். சீதனம் பற்றி ஆய்வு செய்து, யாழ்ப்பாணக் கல்விமான்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பழைய, பதிப்புகள் முடிந்துபோன சமூகவியல், ஆய்வு நூல்களையும், சட்டப் புத்தகங்களையும் படிப்பதற்கு எனக்கு அரிய வாய்ப்புக் கிடைத்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில், நாளாந்தம் பல மணிநேரம் ஆய்வில் ஈடுபட்டேன். யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் சீதன வழக்குமுறை தோன்றியதன் மூல வரலாற்று வேர்களையும், பாரம்பரிய சட்டங்களையும் ஆய்வு செய்தபோது எனக்கு ஒருபுறத்தில் ஆர்வமும் மறு புறத்தில் அங்கலாய்ப்பும் ஏற்பட்டது. எனக்கு ஆர்வம் ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்றால், இந்த ஆய்வுகளின்போது பெண்களுக்குக் கணிசமான அளவு சொத்துரிமை வழங்கும் ஒரு பூர்வீக தாய்வழிச் சொத்துடைமை முறைமையின் வரலாற்று மூலத்தை நான் அறிய முடிந்தமைதான். இந்தப் பூர்வீக சொத்துடைமைச் சட்டத்தைப் படித்தபோது எனக்கு ஓர் அங்கலாய்ப்பும் ஏற்பட்டது. அதாவது, புதிய சீதன ஒழிப்புச் சட்டங்களை இயற்றுவதால் பெண்களின் சொத்துரிமை பலப்படுத்தப்பட வேண்டுமே தவிர பறித்தெடுக்கப்படக்கூடாது என்பதுதான்.

உலகத்தின் ஏனைய சமுதாயங்களில் சொத்துரிமையைப் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளாகப் பெண்கள் போராடி வருகிறார்கள். நிலைமை அப்படி இருக்கும்பொழுது யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் நீண்டகாலமாக நிலைத்து நிற்கும் தாய்வழிச் சொத்து திருமண முறைக்குப் பங்கம் ஏற்படுத்துவது புத்திசாலித்தனமல்ல. இந்த மரபுச் சட்டங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னரே அவற்றில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென எனக்குத் தோன்றியது. அத்தோடு, இந்தச் சட்டங்களிலுள்ள ஆக்கபூர்வமான நல்லம்சங்களைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, அவற்றை அகற்றிவிடக் கூடாது. சீதன முறைக்கு எதிராகச் சட்டம் இயற்றும் பொழுது இந்தப் பிரச்சினை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என நான் கருதினேன்.

யாழ்ப்பாணத்தில் நிலவிய தாய்வழிச் சொத்துடைமை முறை, பேச்சுத் திருமணம் மற்றும் பல சமூக - பண்பாட்டு வழக்குகளை ஆழமாகப் பார்த்த போது சீதனப் பிரச்சினை பெண்களுக்கு எதிரான சமூக ஒடுக்குமுறையின் ஒரு வெளிப்பாடு என்பது தெளிவாகியது. சீதனப் பிரச்சினை சம்பந்தமான எனது கருத்துகளை எல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட முடிவெடுத்தேன். 1994 ஆம் ஆண்டில் '**உடையாத விலங்கு**' என்ற தலைப்பில் எனது நூல் வெளியாகியது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

அதிகாரத்தில் மோகம்; அதனால் என் மீது சிலருக்கு வெறுப்பு!

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பிரத்தியேக நேர்காணல்

(நேற்றைய தொடர்ச்சி...)

சிங்களவரை அண்டி வாழ்வதே ஒரே வழி என்று எண்ணுவது எம்மை நாமே ஏமாற்றுவதாகவே அமையும். யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு முன்னேற யாவரும் ஒன்றிணைய வேண்டும் - சி.வி.விக்னேஸ்வரன்.

கேள்வி: இடைக்கால அறிக்கை வந்திருக்கிறது – அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பும் இருக்கிறது. ஏனெனில், அதற்கான வழிகாட்டல் குழுவில் சம்பந்தனும், சுமந்திரனும் அங்கம் வகித்தனர். அந்த அறிக்கை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா ?

பதில்: இடைக்கால அறிக்கை நோயை அறிந்ததாகவோ, தீர்க்கப்போதுமானதாகவோ தென்படவில்லை. நோயை அறியாத சிகிச்சை தோல்வியில் முடியும்.

கேள்வி: கடந்த ஒரு சில மாதங்களில் ஏற்பட்ட சம்பவங்களைப் பார்த்தால் எப்படியாவது உங்களைத் தமிழ்த் தேசிய அரசியல் அரங்கிலிருந்து அகற்றிவிட வேண்டுமென்னும் ஒரு போக்கே தெரிந்தது. இப்போதும் தெரிகிறது. ஆனால், மக்களோ உங்கள் மீது அளப்பரிய நம்பிக்கையை வைத்திருக்கின்றனர். 2009 இற்குப் பிறகு ஒரு வலுவான குரல் இல்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தவர்களுக்குநீங்கள்கிடைத்தீர்கள். விக்னேஸ்வரனைமக்கள்நேசிக்கின்றனர். ஆனால், தமிழரசுக் கட்சியோ எதிர்க்கிறது. ஏன் இந்த நிலைமை? தமிழரசு கட்சி உங்களை எதிர்க்கிறது என்று நான் கூறுவதற்குப் பின்னால் வலுவான ஆதாரங்கள் உள்ளன.

ஒன்று, உங்களை இரவோடு இரவாக அகற்றும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சி. அந்த முயற்சி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளால் தோற்கடிக்கப்பட்டது. அதன் பின்னர் தற்போது உங்களுக்கு எதிராக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் போக்கைப் பார்த்தால் அதன் பின்னாலும் உங்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து உங்களை அகற்றவேண்டும் என்னும் நோக்கமேதெரிகிறது.உங்களது வேண்டுகோளின் அடிப்படையில் ஆளுநரால் பணி நீக்கம் செய்யப்பட்ட வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் உங்களுக்கு எதிராகத் தொடுத்திருக்கும் வழக்கில் – டெனீஸ்வரனுக்கு ஆதரவாக ஆஜராகியிருக்கும் சட்டத்தரணி நிரான் அங்கிற்றல் ஆவார். இவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கனிஷ்ட சட்டத்தரணி என்பது அனைவரும் அறிந்த விடயம். இதிலும் தமிழரசுக் கட்சி உங்களுக்கு எதிராகத்தானே இருக்கிறது. உங்கள் மீது தமிழரசுக் கட்சிக்கு ஏன் இந்தளவு வெறுப்பு?

பதில்: என் மீது எவருக்குமே வெறுப்பு இல்லை. தங்கள் மீதும், அரசியல் தரக் கூடிய அதிகாரங்கள் மீதும், தம்முடைய எதிர்காலம் மீதும் அவர்களுக்கிருக்கும் அலாதியான பிணைப்பே அவர்களை அவ்வாறுநடந்துகொள்ளச்செய்கின்றது.

ஒரு உதாரணத்தைத் தருகின்றேன். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி புதிய அரசு வந்ததும் பலவிதமான எதிர் பார்ப்புகள் தமிழர் தரப்பில் இருந்தன. அந்தக்கால பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தீர்களானால் அரசியல் ஹேஷ்யங்கள் பல பத்திரிகைகளில் வெளிவந்தன. இன்னாருக்கு இந்த அமைச்சு என்றெல்லாம்வெளிவந்தன.எமதுஒத்துழைப்புடன் புதிய அரசு நிறுவப்பட்டதால் அவ்வாறான எதிர்பார்ப்புக்களை நாம் பிழையென்று கூற முடியாது.

> சிலர் தமது முக்கியத்துவம் அதிகாரம் குறைந்து விடும் என்று கட்சிகளுக்குள் இளைஞர்களை உள்நுழைக்க தயக்கம் காட்டுகின்றார்கள். கட்சிகளால் தமிழ் மக்களுக்குக் கூடிய தொல்லைகளே ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் நலத்தை விட கட்சிகளின் தலைமைத்துவங்கள் தத்தமது கட்சிகளுக்கே முதலிடம் கொடுக்கின்றன. கட்சிகளுக்கு அப்பால் சென்று தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்தினால் தான் எமக்கு விமோசனம் கிடைக்கும்.

சவால்களைக் கண்டு துவண்டு விடக் கூடாது

ஆனால், நாம் வடமாகாணசபையில் அதே வருடம் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இனப்படுகொலை சம்பந்தமான பிரேரணையை நிறைவேற்றிய போது இன்னாருக்கு இந்த அமைச்சு என்ற அரசியல் ஹேஷ்யங்கள் நிறுத்தப்பட்டன. சிலரின் எதிர்பார்ப்புக்களும் அப்போது சுக்கு நூறாக்கப்பட்டன. இதனால் தான் வெளித்தோற்ற அமைதிக்கும் தமது எதிர் பார்ப்புக்களுக்கும் பங்கம் விளைவிக்கக் கூடிய ஒருவரை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணம் வலுத்து வருகின்றது.

இது உண்மையில் எம்மவர் சிந்தனையா அல்லது கொழும்பின் அதிகார பீடத்தின் சிந்தனையின் ஒரு பரிமாணமா என்று தெரியவில்லை. அந்த அதிகார மையத்துக்கு அண்மித்த எம்மவர்கள் அந்த அதிகார பீடத்தின் எதிர்பார்ப்புக்களை நடைமுறைப்படுத்தவும் இவ்வாறான காரியங்களில் இறங்கியிருக்கக்கூடும். என்னைப் பொறுத்தவரையில் எம்மக்கள் சார்பான ஒரு வழக்கைக் கையேந்தி உள்ளேன். வழக்கை எனது கட்சிக் காரர்களான தமிழ் பேசும் மக்கள் சார்பில் நடத்தி முடிப்பது எனது கடமை. அதையே நான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றேன். சவால்களைக் கண்டு துவண்டு விடக்கூடாது.

அதிகாரம் குறைந்து விடும் என்று அச்சம்; இளைஞர்களை உள் நுழைக்க தயக்கம் அதுவே!

எமது கட்சியினர் மட்டுமல்லர் ஆளுநரும் எதிரான செயற்பாடே!

உங்களுக்கு இன்னொன்றையும் கூற வேண்டும். எமது கட்சி மட்டும் அல்ல எமது ஆளுநர் கூட எதிர் நடவடிக்கைகளில் எமக்கெதிராக ஈடுபட்டு வருகின்றார். அமைச்சரவை கோரும் செயலாளர்களை எமக்குத் தராமல் தாக்காட்டி, தாமதித்து எமது நிர்வாகத்தை தடை செய்யப் பார்க்கின்றார். தடை செய்துவிட்டு வட மாகாணசபை, நிர்வாகத்திறன் இல்லாதது என்ற கருத்தை முன்வைக்கப் பலர் ஒன்று கூடியுள்ளார்கள்.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எப்போதுமே முரண்பாடுகளின் கூடாரமாகவே இருக்கிறது. ஒற்றுமை அவசியம் என்று சொல்லிக்கொண்டாலும் கூட அப்படியான ஒற்றுமைக்கான முயற்சிகள் எதனையும் காணமுடியவில்லை. நீங்கள் கூடப் பல தடவைகள் ஒற்றுமையின் அவசியம் பற்றி வலியுறுத்தியிருக்கின்றீர்கள். ஆனால், நடைமுறையில் அது ஒரு பெரும் சவாலாகவே இருக்கிறது.

இந்த நிலையில், தொகுதிவாரித் தேர்தல் முறை அறிமுகமானால் கூட்டமைப்பின் தேவையும் இல்லாமல் போய் விடும் என்பது சிலரது கணிப்பாக இருக்கிறது. ஆனால், தேர்தல் அரசியலுக்கு அப்பால் தமிழ்மக்களுக்குஒருவலுவானதலைமை அவசியம் என்பதே அனைவரதும் எதிர் பார்ப்பு. இந்தநிலையில், கூட்டமைப்பின் தேவை மற்றும் அதன் எதிர்காலம் தொடர்பில் உங்களின் அவதானம் என்ன?

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சி அல்ல. அது ஒரு கூட்டமைப்பு. கொள்கை ரீதியில் முன்னைய ஆயுதக் கட்சிகளுக்கிடையே பலத்த வேற்றுமை தென்படாவிட்டாலும் கட்சி ரீதியில் அவர்கள் ஒவ்வொருவரும் தமது கட்சியைக் கட்டிக் காக்கவே முற்பட்டுள்ளனர். இலங் கைத் தமிழரசுக்கட்சிதன்னைப்பற்றிய பிறிதொரு கருத்தைக் கொண்டுள்ளது.

நாம் ஒரு ஜனநாயகக் கட்சி. முன்னர் ஆயுதம் ஏந்திய கட்சிகள் போன்று வன்முறை நிகழ்வுகளில் நாங்கள் ஈடுபடவில்லை. நாம் வழி அமைத்துக் கொடுத்தால் தான் மற்றைய கட்சிகளால் மக்களின் செல்வாக்கைப் பெறமுடியும் என்று நம்புகின்றார்கள்.

கானல் நீராகவே தென்படும் ஒற்றுமை

எனவே தான் ஒற்றுமை என்பது கானல் நீராகத் தென்படுகின்றது. சிந்தனைகள் வேறாக இருக்கின்றமையால் தான் இந்த சிதறுண்ட நிலைகாணப்படுகின்றது.எமது கட்சிகளையும், வேற்றுமைகளையும் மறந்து தமிழ் மக்களின் நலனே முக்கியம் என்ற அடிப்படையில் அரசியல் ரீதியாக உழைக்க முன்வந்தோமானால் ஒத்துழைப்பு என்பது எட்டாத கனியாக இருக்கவேண்டியதில்லை.

கூட்டமைப்பு ஜனநாயகத்துக்கு உடன்படும் எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்க்க வேண்டும். தேர்தல் காலங்களில் தமிழரசுக் கட்சி தனக்குக் கூடிய போட்டியாளர்களைக் கோரலாம். ஆனால், நடைமுறையில் சிறிய கட்சி, பெரிய கட்சி என்ற பாகுபாடு இருக்கக்கூடாது. கட்சிகளுக்குள் சிலர் தமது முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று ஒற்றுமையை வர விடாது தடுக்கின்றார்கள்.

சிலர் தமது முக்கியத்துவம் அதிகாரம் குறைந்து விடும் என்று கட்சிகளுக்குள் இளைஞர்களை உள்நுழைக்கத்தயக்கம் காட்டுகின்றார்கள். கட்சிகளால் தமிழ் மக்களுக்குக் கூடிய தொல்லைகளே ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் நலத்தை விட கட்சிகளின் தலைமைத்துவங்கள் தத்தமது கட்சிகளுக்கே முதலிடம் கொடுக்கின்றன. கட்சிகளுக்கு அப்பால் சென்று

நேர்கண்டவர்:
யதீந்திரா

தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்தினால் தான் எமக்கு விமோசனம் கிடைக்கும்.

கேள்வி: கட்சி அரசியலுக்கு அப்பால் உங்களை நோக்குபவர்கள் இப்படியொரு விமர்சனத்தை முன்வைக்கின்றார்கள் – அதாவது, கொள்கை ரீதியில் விக்னேஸ்வரனின் உறுதி முக்கியமானது – அது கட்டாயமான ஒன்றுதான்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

என்றென்றும் நான் மக்களுடன் தான்!

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், வடக்கு மாகாண சபையை வினைத்திறன்மிக்க வகையில் நிர்வகிப் பதில் அவர் போதிய கவனம் செலுத்த வில்லை அரசு ஒதுக்கிய நிதியைக் கூட முழுமையாகப் பயன்படுத்தவில்லை – அவை திரும்பிச் செல்கின்றன – இப் படியான விமர்சனங்களுக்கு உங்களின் பதில் என்ன?

ஒரு பொய்யை நூறு தடவை சொன்னால் உண்மையாகி விடும் என்ற எண்ணத்தில்..!

பதில்: முதலில் ஒதுக்கிய நிதி பற் றிக் கூறிவிடுகின்றேன். அண்மையில் வடமாகாண சபையிலும் முழுவிவ ராங்களையும் சமர்ப்பித்திருந்தேன். அரசு ஒதுக்கிய நிதியில் ஒரு சதம்கூட இது வரையில் திருப்பி அனுப்பப்படவில்லை. ஒரு பொய்யை 100 தடவை சொன்னால் உண்மையாகிவிடும் என்ற எண்ணத்தில் தான் இவ்வாறான பொய்மைகள் காற்றில் விடப்படுகின்றன. எனவே, இது பொய் யென்றால் அடுத்தது புளுகாகும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருக்கும் குறைபாடுகள் பற்றி திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் தற்போதைய தலைவர் சம்பந்தன் ஆகி யோர் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி அப்போதைய இந்தியப் பிரதமருக்குக் கடிதம் ஒன்று எழுதினார்கள். எதிர்பார்த்த அதிகாரங் கள் எவையும் எமக்குத் தரப்படவில்லை. ஆளுநரின் உள்ளீடல் வெகுவாக இருக் கின்றது என்றெல்லாம் கூறினார்கள். 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் புறக் கணித்ததால் பல தேர்தல் ஊடான பாதிப்புக்களையும் எமது கட்சி எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஆகவே, அதே முழுமையற்ற, முட்கள் நிறைந்த, முன் னுக்குப் பின் முரண்பாடு கள் காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் மாகாண சபைகள் சட்டத் தையும் கொண்டு தான் அவற்றின் அடிப் படையில் நாங்கள் 2013 இல் வடமாகா ணத்தில் முதன் முறையாக ஆட்சி அமைத் தோம். பல வருடகாலம் எமது நிர்வாகம் அலுவலர்கள் கைவசம் இருந்தது. அவர்கள் அப்போதைய அரசியல்வாதி களையும் ஆளுநரையும் திருப்திப்படுத்தி க் கொண்டு தனிக் காட்டு ராஜாக்களாக வலம் வந்தார்கள்.

மக்களாட்சி வந்ததும் அவர்களால் மாறமுடியவில்லை அல்லது மாறத் தயங்கினார்கள். அரசியல்வாதிகள் அப்பொழுதும் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த எத்தனித்தார்கள். அதிகாரம் எம் கையில் இல்லாத போது இவர்க ளைக் கட்டுப்படுத்துவது மிகுந்த கடின மான செயலாக இருந்தது. வினைத்தி றன் மிக்க நிர்வாகம் என்பது எமது கொள்கைகளை உடனே நடைமுறைப் படுத்தும் அலுவலர்கள் எமது கட்டுப் பாட்டுக்குள் இருந்தால்தான் சாத்திய மாகும். வெளியார்களுக்குத் தாளம் போடுபவர்களை வைத்து எமது நிர் வாகத்தைத் திறம்பட நடத்த முடியாது.

எத்தனை, எத்தனையோ நெருக்கடிகள்

மாகாணசபையின் பிரதம செயலா ளர் என்பவர் அமைச்சர் அவைக்குக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும். அவ்வாறு கட்டுப்படாத ஒரு பிரதம செயலாளர் உயர் நீதிமன்றத்தில் எமக் கெதிராக ஒரு வழக்கு வைத்தார். இவ் வாறான பலவித நெருக்கடிகளுள் அகப்பட்டே கடமையாற்றி வருகின் றோம். இன்று கூட எமக்குத் தேவையான செயலாளர்களைக் கேட்கும் போது ஆளுநர் தரமறுக்கிறார். செப்ரெம்பர் முதலாம் திகதி மாற்றலாகிச் செல்ல வேண்டிய ஒரு செயலாளரை வலுக் கட்டாயமாகத் தொடர்ந்து இங்கு சேவை யாற்ற இடமளித்து எமது கோரிக்கை களைப் புறக்கணித்து வருகின்றார்.

ஆகவே, மத்திய அரச உள்ளீடல்கள், ஆளுநரின் உள்ளீடல்கள், அரசியல் வாதிகளின் உள்ளீடல்கள் ஆகியவற்றால் பிழையான நெறிமுறைகளில் ஊறிவந்த அலுவலர்களின் அசமந்தப் போக்கு ஆகியவற்றின் மத்தியிலேயே நாம் நிர்வாகம் நடத்த வேண்டியுள்ளது.

சட்டத்தின் வலுவற்ற தன்மையை உணர்ந்த நாங்கள் மிகக் கவனமாக முன்னேறி வருகின்றோம். எல்லா அலு வலர்களும் ஒரே மாதிரியானவர்கள் என்று கூறமுடியாது. மக்கட் பிரதிநிதிகளின் கருத்தறிந்து கடமைகளில் ஈடுபடும் பலர் இருப்பதால் தான் எமது நிர்வாகம் இந்த தளவுக்கு சுமுகமாகச் சென்றுகொண்டி ருக்கின்றது. சிலர் அலுவலர்களை நாம் ஏன் கட்டாயப்படுத்தவில்லை என்று கேட் கின்றார்கள். சட்டம் எம் சார்பில் இல்லாத போது கட்டாயப்படுத்தி எதுவும் நடை பெறாது. எமது அலுவலர்கள் பெரும் பான்மையினரின் கடமையுணர்ச்சியும் கட்டுப்பாடுமே எம்மை இந்தளவுக்கு சுமுகமாக இயங்கச் செய்துள்ளது.

கேள்வி: வடக்கு கிழக்கு இணைப்பு என்பது தமிழ் மக்களின் அரசியல் தீர்வில் ஓர் அங்கமாகும். இதில் எந்தவொரு விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என் பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாக இருந் திருக்கிறது. இவ்வாறானதொரு நிலையில் வடக்கு–கிழக்கு இணைப்பு தற்போது சாத்தியமில்லை. அதனை பின்னர் பார்ப்போம். இப்போது கிடைப்பதை எடுப் போம் என்றும் சிலர் கூறிவருகின்றனர். அதேவேளை, கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் இணங்காவிட்டால் கிழக்கிலுள்ள தமிழ் பகுதிகளை வடக்கோடு இணைத்தாவது இதனைச் செய்யலாம் என்பது இன்னும் ஒரு சிலரது வாதம். ஆனால், அதுவும் பலவீனமான ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில், அவ்வாறானதொரு நிலைப் பாட்டுக்குச் சென்றால் திருகோணமலை துறைமுகம் அமைந்துள்ள பகுதியைக் கைவிட வேண்டிவரும். ஏனெனில், அது தற்போது ஒரு தமிழ்ப் பகுதியல்ல. அனைத்து இனங்களும் வாழும் பகுதி. திருகோண மலை ஒரு மூலோபாய தளம் என்னும் வகையில் அதனைத் தமிழர்கள் கைவிடுவதானது மறுபுறத்தில் தமிழர் களின் மூலோபாய முக்கியத்துவத்தையும் இல்லாது செய்துவிடும். இந்த நிலையில், வடக்கு–கிழக்கு இணைப்பு விவகாரத்தைக் கையாள்வது எப்படி? இது தொடர்பில் உங்களது பார்வை என்ன?

திருமலைக்கு நடந்தது மட்டு. அம்பாறைக்கும்

பதில்: வடக்கு–கிழக்கு இணைப்பை நடைமுறைப்படுத்த விடாமலே அரசாங் கம் திட்டமிட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. தமிழ் பேசும் திருகோண மலை மாவட்டம் முப்பகுதியினரின் மாவட்டமாகக் கடந்த ஐம்பது வருடங்களுக் குள்ளேயே மாற்றப்பட்டுள்ளது.

சமஷ்டியில் சில தனித்துவ அலகு களையும் உள்ளடக்கலாம். திருகோண மலை நகரத்திற்கென ஒரு சிறப்பு நிர்வா கத்தை ஏற்படுத்தலாம். வடக்கு கிழக்கு இணைப்பு எதற்காகக் கோரப்படுகின்றது என்பதை நாம் முற்றாக அறிந்திருக்க வேண்டும். தமிழ் பேசும் பிரதேசங்கள் ஒன்றாக இல்லாவிட்டால் திருகோண மலை மாவட்டத்துக்கு நடந்ததே மட்டக் களப்புக்கும் அம்பாறைக்கும் நடக்கும். அரசுக்குப் பல அனுசரணைகள் உள்ளன. நாட்டின் மத்திய அரசு பெரும்பான்மை யினரது கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கூடிய நாட்டு மக்கள் பெரும்பான்மை இனத்தவர்கள். பிற நாடுகளுடன் ஒப்பந் தங்கள் வைத்துக்கொள்ளும் அதிகாரம் அவர்களுடையது. மகாவலி அபிவிருத்தி போன்ற சட்டங்களை அவர்களே நடை முறைப்படுத்துகின்றார்கள். ஆகவே, தான் அவர்கள் திருகோணமலை மாவட் டத்தையும் தற்போது முல்லைத்தீவு குத்தமிழ்ப்பிரதேசங்களை ஒன்றிணைத்து முஸ்லிம் மக்களுக்கு அதனுள் ஒரு தனி அலகை உருவாக்குவதே உசிதம் எனத் தோற்றுகின்றது.

மாவட்டத்தையும் பெரும்பான்மை இனத் தவரின் குடியேற்ற நிலங்களாக மாற்றி வருகின்றார்கள்.

திருகோணமலைக்கு விசேட நிர்வாக அந்தஸ்தை அளித்து, மிகுதி வடக்கு – கிழக்

மாகாண சபைக்கு அரசு ஒதுக்கிய நிதியில் ஒரு சதம் கூட திரும்பிவிடவில்லை

கேள்வி: இந்த இடத்தில் இந்தியா வின் தலையீடு எவ்வாறு அமைய வேண்டு மென்று எண்ணுகின்றீர்கள்? ஏனெனில் இந்தியாவின் தலையீடு இன்றி அல்லது அனுசரணையின்றி தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வைக் காணமுடியாது என்பது ஒரு நீண்டகாலப் பார்வை. ஆனால், தமிழர் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படா மல் அது நிகழ வாய்ப்பில்லை. இந்தியா வுடனான கூட்டமைப்பின் ஊடாட்டமும் கூட மிகவும் குறைந்து விட்டதாகவே தோன்றுகின்றது.

உதாரணமாக, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரான பின்னர் ஒரு முறைகூட இந்தியாவிற்கு உத்தியோகபூர்வமாக பய ணிக்கவில்லை. இந்தநிலையில், இந்த விடயத்தை எவ்வாறு கையாளலாம் என்று எண்ணுகின்றீர்கள்?

பதில்: இந்தியா தான் எமக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தந்தது. எனவே, அது மாற்றப்படும் போது இந்தியாவின் அனு சரணை அவசியம். இந்தியாவுடன் நல் லுறவைப் பேணுவது எமது தலையாய கடமை என்றே கூறுவேன். பாரதத்துடனான எமது உறவுகள் மிக நெருக்கமாகவே இருக்கின்றன.

கேள்வி: தாயகத்தில் மட்டுமன்றி புலம்பெயர் சமூகத்தினர் மத்தியிலும் தங்கள் மீது பெரும் மதிப்பும் எதிர்பார்ப் பும் நிலவுகிறது. அவர்களுடைய அழைப்பின் பேரில் நீங்கள் அங்கு சென்றும் வந்திருக்கின்றீர்கள். ஆனா லும், 2009 இற்கு பின்னர் புலம்பெயர் அமைப்புக்களுக்கு இடையிலும் ஒருங் கிணைவும் ஒன்றுபட்ட வேலைத்திட்டமும் இல்லை. இதற்குக் காரணம் களத்தி லிருந்து அவர்களை வழிப்படுத்தக் கூடிய ஒரு வலுவான தலைமை இல்லை. இந்த நிலையில்தான் அனைவரது பார்வையும் உங்களின் பக்கம் திரும்பி யது. நீங்கள் புலம்பெயர் சமூகத்தோடு தொடர்பிலிருப்பவர் என்னும் வகையில் அவர்களது செயற்பாடுகளை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

எமது தமிழ் பேசும் எம்.பிக்கள் சுயநலம் களைந்தால்...!

பதில்: எமது தமிழ் பேசும் நாடாளு மன்றத்தினர் சுயநலம் களைந்து யாவரு டனும் ஒத்துழைத்தால் உலகத் தமிழ் மக்கள் யாவரும் ஒரு கொடியின் கீழ் நின்று உறவாடும், போராடும் ஒரு நிலை ஏற்படலாம். எம்மைப் பொறுத்தவரையில் கனடா மற்றும் பிரித்தானியாவில் இரட்டை நகர உடன்படிக்கைகள் மூலம் அங்குள்ள எம்மவரை இங்குள்ள எம்மவருடன் சேர்ந்து நடவடிக்கைகள் எடுக்க ஊக் கப்படுத்தியும் உற்சாகப்படுத்தியும் வரு கின்றோம். முதலமைச்சர் நிதியத்தை அரசு தொடர்ந்து தாமதப்படுத்துவதால் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட் டுள்ளது. மாற்றுவழிகளைத்தேடிக்கொண் டிருக்கின்றோம். புலம்பெயர் மக்களுட னான நெருங்கிய உறவுகளை நாம் ஏற் படுத்துவோம். அதில்சந்தேகம்வேண்டாம்.

கேள்வி: மஹிந்த ராஜபக்ஷ அதி காரத்தில் இருந்தபோது இறுதி யுத்தத் தின் போது இடம்பெற்ற போர்க்குற்றங் கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் மேற்குலகு கூடு தல் கரிசனையை காண்பித்தது. ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த விட யங்கள் படிப்படியாக கிடப்பிற்குச் செல் கின்றன. ஆனால், எங்களுக்குத்தெரியும் கொழும்பின் ஆட்சியாளர்கள் நெருக்கடி களை எதிர்கொள்ளாது விட்டால் தமிழ் மக்கள் தொடர்பில் எந்தவொரு விடயத்தி லும் அக்கறை காண்பிக்கமாட்டார்கள். இந்த நிலையில், சர்வதேச அழுத்தங் களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் களமும் புலமும் எவ்வாறு செயற்படலாம் என்று கருதுகின்றீர்கள்?

பதில்: அது தான் ஏற்கனவே கூறி விட்டேன். எமது தலைவர்களின் சிந் தனையில் தெளிவு ஏற்பட வேண்டும். நாம் சிங்களவரைப் பகைத்து எதுவும் பெறமுடியாது. அவர்களை அண்டி வாழ்வதே ஒரேவழி என்று எண்கின்றமை எம்மை நாமே ஏமாற்றுவதாக முடியும். யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு முன்னேற யாவரும் ஒன்றிணைய வேண்டும். இதற்கு முட்டுக் கட்டைகள் ஏற்படுத்துபவர்களை அடையாளம் கண்டு அவர்களை எச்சரிக்க வேண்டும். இடைக்கால அறிக்கையைப் பார்க் கின்றபோது களமும் புலமும் கைகோக்க வேண்டிய கட்டம் வந்துகொண்டிருக் கின்றது என்றே கூற வேண்டும்.

கேள்வி: இறுதியாக நீதியரசர் விக்னேஸ்வரன் மீது தமிழ் மக்கள் அளவுகடந்த மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருக்கின்றனர். விக்னேஸ்வரன் தொடர்ந்தும் தங்களுடன் இருக்க வேண்டுமென்றும் மக்கள் எதிர்பார்க் கின்றனர். இந்த மக்களுக்காக விக்கி னேஸ்வரன் என்ன செய்யப் போகின் றார்? மக்கள் எதிர்பார்ப்பது போன்று நிற்பாரா?

பதில்: விக்னேஸ்வரன் என்றென்றும் மக்களுடன் தான். அவரை வழி நடத்து வது இறைவன். அவ்வளவு தான் இப் போதைக்கு என்னால் கூற முடியும். ★

காலைக்கதிர் Kalaikkathir

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இருந்த வரையில் ஐரோப்பிய ஒன்றிய இராணுவத்துக்கான திட்டங்களை வீட்டோ அதிகாரம் கொண்டு தடுக்க வொஷிங்டன் லண்டனைச் சார்ந்திருந்தது

சர்வதேச அளவில் தீவிரப்படுத்தப்பட்டு வரும் போர் முனைவுக்கு மத்தியில், வொஷிங்டனுக்கும் குறிப்பாக பேர்லின்-பாரிஸ் அச்சாக உள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே இராணுவ பதற்றங்கள் துரிதமாக அதிகரித்து வருகின்றன. அதன் சொந்தப் போர்களுக்கு அதிக ஐரோப்பிய உதவிகளைப் பெறும் நம்பிக்கையில், வொஷிங்டன் சமீபத்திய ஆண்டுகளில் ஐரோப்பா அதன் இராணுவ செலவினங்களை அதிகரிக்க வேண்டுமென மீண்டும் மீண்டும் அழுத்தம் அளித்துள்ள அதே வேளையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இருந்த வரையில் ஐரோப்பிய ஒன்றிய இராணுவத்துக்கான திட்டங்களை வீட்டோ அதிகாரம் கொண்டு தடுக்க வொஷிங்டன் லண்டனைச் சார்ந்திருந்தது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது என்றான பின்னர், ஜேர்மனியும் பிரான்ஸும் அமெரிக்காவிடம் இருந்து சுதந்திரமாக ஓர் ஆக்ரோஷ ஐரோப்பிய ஒன்றிய இராணுவ கொள்கைக்கான திட்டங்களை விரைவாக மீட்டு உயிர்ப்பித்துள்ளன.

ஸ்ராலினிச அதிகாரத்துவத்தால் 1991 இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டு ஒரு கால் நூற்றாண்டுக்குப் பின்னர், ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் அமெரிக்காவுக்குமான ஒரு பொதுவான எதிரி இல்லாமல் போனதால், பிரதான நேட்டோ அதிகாரங்களுக்கு இடையிலான பதற்றங்கள் இந்தக் கூட்டணியை பொறிவின் விளிம்புக்குக் கொண்டு வருகின்றன. அட்லாண்டிக் கடந்த நாடுகளுக்கு இடையிலான கூட்டணியின் அடித்தளங்கள் ஆட்டம் கண்டுள்ளன. ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பின்னர், அவரது நிர்வாகம் தண்டிக்கும் வகையிலான வரிவிதிப்புகளுடன் ஐரோப்பிய ஒன்றிய கார் மற்றும் எஃகுத்துறை ஏற்றுமதிகளை இலக்கில் வைக்கும் என்பதை ட்ரம்ப் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி உள்ளார். இது முற்றுமுதலான அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக போரைத்தூண்டக்கூடியதாகும்.

இந்த வர்த்தகப் பதற்றங்கள் நேட்டோவுக்குள் கட்டமைந்து வரும் வெடிப்பார்ந்த மூலோபாய மோதல்களைப் பிரதிபலிக்கின்றன. அதேவேளையில் ரஷ்யா மற்றும் சீனாவை அமெரிக்கா இலக்கில் வைப்பது உலகையே முற்று முதலான போர் விளிம்பில் நிறுத்தி உள்ளது. வடகொரியாவை ட்ரம்ப் போரைக்கொண்டு அச்சுறுத்துகின்ற நிலையில், இது இன்றைய ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டத்தின் விடயமாக உள்ளது டன், சீனாவுடனான போராக தீவிர மடையக்கூடிய ஒரு போரில் வொஷிங்டனை ஐரோப்பிய ஒன்றிய சக்திகள் ஆதரிக்காமல் போகின்றமைக்கான சாத்தியக்கூறு முன்பினும் அதிகமாக உள்ளது.

கிழக்கு உக்ரேனில் ரஷ்ய மொழி பேசும் சக்திகளுக்கு எதிராக உக்ரேனில் அதிவலது போராளிகள் குழுக்களை ஆயுதமேந்த செய்வதென்ற ஓர் அமெரிக்க கொள்கையை வெட்டுவதற்காக, பேர்லினும் பரிஸும் 2015 இல் உக்ரேன் விவகாரத்தில் தலையீடு செய்தன

2014 இல் நேட்டோ ஆதரவுடன் நடந்த கியேவ் ஆட்சிக் கவிழ்ப்புச் சதிக்குப் பின்னர் இருந்து கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோவின் இடைவிடாத இராணுவ ஆயத்தப்படுத்தலின் இலக்காக இருந்துள்ள ரஷ்யாவை ஜூங்கரின் உரை குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எவ்வாறிருப்பினும் கிழக்கு உக்ரேனில் ரஷ்ய மொழி பேசும் சக்திகளுக்கு எதிராக உக்ரேனில் அதிவலது போராளிகள் குழுக்களை ஆயுதமேந்த செய்வதென்ற ஓர் அமெரிக்க கொள்கையை வெட்டுவதற்காக, பேர்லினும் பரிஸும் 2015 இல் உக்ரேன் விவகாரத்தில் தலையீடு செய்தன. உக்ரேன் ஆட்சிக்கு ஆயுதங்கள் வழங்குவதென ட்ரம்ப் நிர்வாகம் மீண்டும் இப்போது அச்சுறுத்திக் கொண்டிருக்கையில், இந்த மோதல்கள் மீண்டும் வெடிப்பார்ந்த மட்டங்களை அடைந்துள்ளன.

எது எவ்வாறிருப்பினும், இந்த போர் முனைவை எதிர்க்கக்கூடிய ஒரே சக்தி சர்வதேச தொழிலாள வர்க்கம் மட்டுமே; உலகெங்கிலும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நலன்களை வலியுறுத்த போட்டியிடுவதில், சர்வசாதாரணமாக ஐரோப்பிய ஒன்றியமே ஒரு மூர்க்கமான வாகனமாக உருவாகி வருகிறது. இது புதிய இரத்தந்தோய்ந்த மோதல்களைத் தூண்ட அச்சுறுத்துகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய கொள்கை ஒரு சமாதான கொள்கை அல்ல. இது லிபியா மற்றும் சிரியா போர்களுக்கான அதன் ஆதரவிலும் மற்றும் உள்நாட்டில் பிரெஞ்சு அவசரகால நிலை போன்ற அதன் ஈவிரக்கமற்ற பொலிஸ்-அரசு நடவடிக்கைகளைத் திணிப்பதற்கு அது வழங்கிய ஆதரவிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அது, போர் இயந்திரத்தைக் கட்டமைப்பதற்கான

நிதிச்சுமைகளை ஐரோப்பிய தொழிலாளர்களின் முதுகில் சுமத்த நோக்கம் கொண்டுள்ள, வொஷிங்டனுடன் போட்டியிடும் ஒரு எதிர்விரோத ஏகாதிபத்திய சக்திகளின் அணியின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. ஜூங்கர், ஐரோப்பிய ஒன்றியத்தின் வலையில் வீழ்ந்துள்ள ஒரு பரந்த நாடுகளின் பட்டியலைச் சுட்டிக்காட்டுவதற்கு அவர் உரையின் பெரும்பகுதியைச் செலவிட்டிருந்தார்.

ஜூங்கர் அவர்களை எச்சரித்தார்: ‘‘பிரிட்டன் வெளியேறியதும் நீங்கள் வருத்தப்படுவீர்கள் என நான் நினைக்கிறேன். அவ்வளவு தான் என்னால் கூற முடியும்’’ என்றார்.

கடந்த ஆண்டு துருக்கியில் அமெரிக்க மற்றும் ஜேர்மன் ஆதரவிலான ஒரு தோல்வியுற்ற ஆட்சிக் கவிழ்ப்பு சதி முயற்சிக்குப் பின்னர் துருக்கிய ஆட்சி உள்நாட்டு எதிர்ப்பை மூர்க்கமாக ஒடுக்கியதற்கு விடையிறுப்பாக, துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதை ஜூங்கர் நிராகரித்தார். ‘‘சட்டத்தின் ஆட்சி, நீதித்துறை மற்றும் அடிப்படை மதிப்புகள் ஆகியவையே பேச்சுவார்த்தைகளின் முதல் முன்னுரிமையில் உள்ளன. இது கண்ணுக்கு எட்டிய எதிர்காலத்தில் துருக்கி ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவத்தைப் பெறுவதை தவிர்த்து விடுகிறது’’ என்றார். ‘‘குறிப்பிட்ட காலத்திற்கு துருக்கி ஏற்ற இறக்கங்களோடு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஒதுங்கிச் சென்றுள்ளது’’ என்றார்.

ஜூங்கர் அவர் உரையில் பிரிட்டனுக்கு ஒரு கண்டிப்பான எச்சரிக்கையும் விடுத்தார். பிரிட்டன் வெளியேறுவதை ஆதரிக்கும் இங்கிலாந்து சுதந்திர கட்சியின் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற அங்கத்தவர்கள் வெளிப்படுத்திய உற்சாகத்திற்கு விடையிறுப்பாக, ஜூங்கர் அவர்களை எச்சரித்தார்: ‘‘பிரிட்டன் வெளியேறியதும் நீங்கள் வருத்தப்படுவீர்களென நான் நினைக்கிறேன். அவ்வளவு தான் என்னால் கூற முடியும்’’ என்றார்.

ஐரோப்பாவில் வெளிநாட்டு முதலீடுகளைக் கண்காணிப்பதற்கும் மற்றும் ஐரோப்பிய துறைமுகங்களை வெளிநாட்டு அரசு உரிமையில் விடுவதை கண்காணிப்பதற்கும் ஜூங்கர் அழைப்புவிடுப்பதானது, சீனாவுக்கு எதிரான ஒரு மறைமுக அச்சுறுத்தலாக இருந்தது. சீனா மிகப் பெரியளவில் ஐரோப்பிய நிறுவனங்களில் முதலீடு செய்து வருவதுடன், ஏதென்ஸில் மிக முக்கிய பிரேயுஸ் துறைமுகத்தின் பங்குகளை அதிகளவில் வாங்கியுள்ளது.

அனைத்திற்கும் மேலாக, மே மாதம் பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், ஜேர்மன் பொதுத்தேர்தல்களை அடுத்துப், பேர்லின் மற்றும் பரிஸ் தலைமையில் பின்பற்றும் ஒரு திட்டநிரலை அமைக்க ஜூங்கரின் உரை நோக்கம் கொண்டுள்ள அதே வேளையில், ஐரோப்பிய ஒன்றியத்துக்குள்ளேயே ஆழ்ந்த பிளவுகள் உள்ளன.

அண்மையில் ஏதென்ஸுக்கு விஜயம் செய்த மக்ரோன், யூரோ மண்டலத்துக்கான ஒரு பொதுவான நாடாளுமன்றம் மற்றும் வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவது உட்பட ஐரோப்பிய ஒன்றிய அமைப்புகளில் நிறைய மாற்றங்கள் செய்வதற்கு அழைப்புவிடுத்தார். கிரேக்க கடன் நிவாரணம் மற்றும் பேர்லின் நீண்டகாலமாக எதிர்த்து வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தை (IMF) கிரேக்க கடன் திட்டத்தில் இருந்து வெளியேற்றுவதற்கும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த முன்மொழிவுகளை ஆமோதிக்க மறுத்து, ஜூங்கரின் உரை மக்ரோனை இலக்கில் வைத்த ஒரு கண்டனமாக இருந்தது. அதற்குப் பதிலாக அவர் ஓர் ஐரோப்பிய நிதி அமைச்சகத்துக்கு அழைப்பு விடுத்தார். அதாவது, வொஷிங்டன் டி.சி. ஐ மையமாகக் கொண்ட IMF ஐப் பிரதியீடு செய்து ஓர் ஐரோப்பிய நாணய நிதியம் உருவாக்குவது. Le Monde கருத்துரைக்கையில், ‘‘அநேகமாக நான்காவது முறையாக பதவிக்கு வரக்கூடிய (ஜேர்மன்) சான்சிலர் அங்கேலா மேர்க்கெலுக்கும் மக்ரோனுக்கும் இடையே, இந்த இலையுதிர்காலத்தில் தொடங்கக்கூடிய யூரோ மண்டல எதிர்காலம் மீதான பேச்சுகளில் சமரசத்தை ஏற்படுத்த’’ ஜூங்கர் தயாரிப்புச் செய்து கொண்டிருப்பதாக குறிப்பிட்டது.

(கேள்வி தொடரும்)

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வழங்கத் திட்டம்!

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் வறுமை மற்றும் பிற காரணங்களால் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாதம்தோறும் சிறப்புக் கொடுப்பனவு வழங்குவது குறித்து கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது.

அடுத்த வருடம் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் ஊடாக மாணவர்கள் இடைவிலகல் தடுக்கப்படுவது மட்டுமன்றி, அவர்களின் கல்வி ஆர்வத்தையும் அதிகரிக்க முடியும் எனக் கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பாடசாலைக்கு சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 100 வீதம் மாதாந்தக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருகிறது எனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் இது தொடர்பான யோசனை முன் வைக்கப் படவிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தற்போது 5 முதல் 17 வரை பாடசாலை கல்வி பெறுவதற்கான வயதாகும். அடுத்த ஆண்டு 5 முதல் 19 வரை வயதை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் சுமார் 45 லட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் இலவசப் பாடநூல்கள், சீருடை, சத்துணவு

மற்றும் மருத்துவக் காப்புறுதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அரசால் மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றன.

இந்த வசதிகள் மற்றும் சலுகைகள் கிடைத்தும் பாடசாலை செல்லக்கூடிய வயதுடைய 4 லட்சத்து 52 ஆயிரத்து 661 பேர் பாடசாலை செல்வதில்லை என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் 51 ஆயிரத்து 249 பேர் இதுவரை ஒரு நாள் கூட பாடசாலை செல்லாதவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சால் முன் வைக்கப்பட்டுள்ள இந்த யோசனைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

மாணவர் வரவுக்கு 100 ரூபா என்ற இந்த யோசனை அவசியமற்றது எனவும் ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தல்களை மையப்படுத்திய இந்த யோசனை முன் வைக்கப்படுகின்றது என அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளரான ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

கல்வியில் சம வாய்ப்பு மற்றும் பாகுபாடு இன்றி பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுவது பற்றித்தான் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏ-9 வீதியில் பஸ் விபத்து!

கொழும்பு, ஒக். 12

ஏ9 பிரதான வீதியில் ஆனையிறவு பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று நேற்று அதிகாலை விபத்திற்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற தனியார் பஸ் ஒன்று, வீதியில் இருந்த பாலத்தின் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (க)

'சயிட்டம்' ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 13 பேர் படுகாயம்!

கொழும்பு, ஒக். 12

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகக் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகை மற்றும் நீர் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சம்பவத்தில் பெற்றோர், உட்பட 13 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தின் போது கலகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

'மாலபே' தனியார் மருத்துவக் கல்லூரியான சைட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியை அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் மற்றும் அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியம் ஆகியன முன்னெடுத்திருந்தன.

பிரதமரின் வாசஸ்தலமான அலரிமாளிகை வரை செல்லத் திட்டமிடப்பட்டு கொழும்பு 7 இல் உள்ள விகாரமஹாதேவி பூங்காவுக்கு முன்பாக ஆரம்பமான சைட்டம் எதிர்ப்பு பேரணி தும்முல்ல சந்தியை கடந்து பம்பலப்பிட்டி சந்தி வரை சென்றது.

பம்பலப்பிட்டியிலிருந்து கொள்ளுப்பிட்டியை நோக்கி மாணவப் படை தனது ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்தது.

இந்தப் பகுதியில் இரும்புத் தடுப்பு வேலிகளை போட்டு மாணவர்களின் பேரணிக்கு பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

அந்த தடைகளையும் மீறி பிரதமரின் வாசஸ்தலம் நோக்கி சைட்டம் எதிர்ப்பு பல்கலைக்கழக மாணவர் பேரணி செல்வதற்கு முயற்சித்தபோது அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

பதற்றநிலையை சமாளிப்பதற்காகவும், ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கும் பொலிஸாரும், கலகத்தடுப்பு பிரிவினரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் என்பன நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த பௌத்த பிக்கு மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட 13 பேர் விபத்துக்கள் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளனர் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சோசலிச கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ மற்றும் சம்பவம் இடம்பெற்றபோது அங்கிருந்த பாதசாரிகளும் வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக கொள்ளுப்பிட்டி பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் அரசியல் கைதிகள் இல்லை: அமைச்சர் தலதா அத்துக்கோரள!

நாட்டில் அரசியல் கைதிகள் இல்லை என்று நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் புதிய செயலாளராக காமினி சென விரத்ன நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்ற நிகழ்வில் கலந்து கொண்டபோது அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது பல நாடுகளுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்வதற்கு நீதி அமைச்சு

நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும், சில நாடுகளுடன் இதுதொடர்பான உடன்படிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை சிறைக்கைதிகள் மற்றும் நாட்டிலுள்ள வெளிநாட்டு சிறைக்கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கான பேச்சு நடத்தப்படுகிறது.

வெளிநாடுகளுக்கு செல்லும் பணியாளர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு முறை ஒன்று எதிர்வரும் சில தினங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் திருமதி தலதா அத்துக்கோரள மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(க)

காலைக்கதிர் Kalaikkathir

இந்திய பொருளாதார மந்த நிலை தெற்காசிய பொருளாதாரம் பாதிப்பு

நாணய மதிப்பிழப்பு, ஜி.எஸ்.ரி உள்ளிட்ட நடவடிக்கைகளால் இந்தியப் பொருளாதாரம் 2018 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் மந்த நிலையில் தான் இருக்கும்.இதனால் தெற்காசிய பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் பாதிக்கும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்தியப் பொருளாதாரம் மற்றும் தெற்காசிய பொருளாதாரம் என்பன தொடர்பாக உலகவங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் 2015 ஆம் ஆண்டில் 8.6 வீதமாக இருந்த இந்தியப் பொருளாதாரம். 2017 இல் 7 வீதமாக சரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பழைய 500 மற்

றும் 1,000 ரூபாய் நோட்டுகளைத் திரும்பப் பெற்றது. ஜி.எஸ்.ரி. வரி விதித்தது உள்ளிட்ட நடவடிக்கைகளால் இந்தியப் பொருளாதாரம் 2018 இல் 7.3 வீதம் வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.ரி. இற்குப் பின் பொருள்கள் தயாரிப்பு குறைந்துள்ளது. எனினும், 2018 இன் காலாண்டுக்குள் இந்த நிலைமை சரியாகும் என்று

உண்மையை உடைத்த உலக வங்கி

எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா நீடித்த வளர்ச்சி பெற வறுமை ஒழிப்புப் பணிகளில் தொடர்ந்தும் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவின் வளர்ச்சி விகித மந்தநிலை, தெற்காசிய வளர்ச்சி வீதத்தைப் பாதிக்கும்.

இதன் விளைவாகப் பொருளாதார வளர்ச்சியில் தெற்காசியா, கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளை விட இரண்டு இடங்கள் பின்தங்கி உள்ளன.

இந்தியாவைப் பொறுத்த வரை 2016 இல் 7.1 வீதமாக இருந்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி குறைவு, 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலேயே 5.7 வீதத்தை எட்டி உள்ளது. ஜி.எஸ்.ரி, 2018 ஆம் ஆண்டிலேயே இந்தியாவின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

பணத்தை இழப்பது போல் நடித்து

விவசாயிகள் போராட்டம்

புதுடில்லி, ஒக். 12

விவசாய கடன் இரத்து உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியில் போராட்டம் நடத்திவரும் தமிழக விவசாயிகள் நேற்று முன்தினம் பணத்தை இழப்பது போல் நடித்து போராட்டம் நடத்தினர்.

விவசாயக் கடன்களை ரத்து செய்ய வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழக விவசாயிகள் டில்லியில் நடத்தி வரும் போராட்டம் நேற்றுமுன்தினம் 87ஆவது நாளாக நீடித்தது.

கடன் மூலம் நிலத்தை இழந்த விவசாயிகள் தற்போது பணத்தையும் இழக்க வேண்டிய சூழ் நிலை உருவாகி உள்ளது என்கிற குற்றச் சாட்டை முன்வைத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதற்காக, பிரதமர் மோடி வேடம் அணிந்த ஒருவர், மற்ற விவசாயிகளை மிரட்டி பணம் பறிக்கின்றமை போல நடித்து காண்பிக்கப்பட்டது.

முடிந்தது சசியின் விடுப்பு மீண்டும் சிறை செல்வாரா?

சசிகலாவுக்கு பெங்களூர் சிறை வழங்கிய விடுப்பு (பரோல்) நேற்றுடன் முடிவடையும் நிலையில் அவர் மீண்டும் சிறை செல்வாரா அல்லது காலம் நீடிக்கப்படுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற அ.தி.மு.க. (அம்மா) அணியின் பொதுச் செயலாளர் சசிகலா பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், சசிகலாவின் கணவர் நடராஜன் உடல்நிலை குறைபாடு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

கணவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என சசிகலா, சிறைத்துறையிடம்விடுப்பு கேட்டு கோரிக்கைவைத்த நிலையில் அவருக்கு ஐந்து நாள்கள் விடுப்பு வழங்கப்பட்டது.

சசிகலாவின் தற்காலிக விடுப்புக் காலம் நேற்றுடன் முடிவடைந்தது. இதனால் அவர் சிறை திரும்புவாரா அல்லது விடுப்புக் காலத்தை நீடிக்கக் கோருவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மதுரை ஆதீன மடத்துக்குள் நுழைய நித்யானந்தாவுக்கு இடைக்கால தடை

மதுரை, ஒக். 12

மதுரை ஆதீன மடத்துக்குள் நித்யானந்தா நுழைவதற்கு இடைக்காலத்தடை விதித்து உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை ஆதீன மடத்துக்குள் நித்தியானந்தா நுழைவதற்கு நிரந்தர தடை விதிக்கக் கோரி ஜெகதல பிரதாபன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அவர் தனது முறைப்பாட்டில், நித்யானந்தா ஆதீன மடத்துக்குள் நுழையத் தடை விதித்துள்ள நிலையில், மடத்துக்குச் செல்ல பொலிஸ் பாதுகாப்புக் கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நித்யானந்தா மடத்துக்குள் நுழைந்தால் தேவையில்லாத சர்ச்சைகள் ஏற்படும், எனவே, மடத்துக்குள் நுழையவும், மடத்தின் நிர்வாகத்தில் தலையிடவும் நித்யானந்தாவுக்கு நிரந்தரத் தடை விதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அவரது மனு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் மனுவைப் பரிசீலனை செய்த நீதிமன்றம், நித்யானந்தா ஆதீன மடத்துக்குள் நுழைவதற்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. மடத்தின் நிர்வாகத்தில் நித்யானந்தா மற்றும் அவரது சீடர்கள் தலையிடவும் தடை விதித்துள்ளது. (ப)

தமிழக மக்களின் பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்த வேண்டும்

உள்கட்சி பூசலால் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்த்து மக்கள் பிரச்சினையில் தமிழக அரசு முழுக் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

தமிழகத்தில் பல்வேறு

தமிழிசை தெரிவிப்பு

கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பாரதிய ஜனதாக் கட்சியில் இணைந்து வருகிறார்கள். தமிழகத்தில் இன்றைய சூழ்நிலையில் பாரதிய ஜனதாக் கட்சி தான் மாற்று சக்தி. தமிழத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியைக் குற்றஞ்சாட்டுவதிலே முனைப்புக்காட்டுகின்றன.

தமிழத்தில் வேகமாகப் பரவி வரும் டெங்குகாய்ச்சல் நோயில் இருந்து மக்களைக் காப்பாற்ற அரசு மட்டுமன்றி தனியார் மருத்துவமனைகளும், சமூக ஆர்வலர்களும் முனைப்புக் காட்ட வேண்டும். தமிழக அரசு கேட்டுக்கொண்டால் மத்திய அரசு உதவத் தயாராக உள்ளது.

தமிழகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அமைச்சரும் அவரவர் விருப்பத்திற்கேற்ப கருத்துகளை பரப்பி வருவதை அரசுகட்டுப்படுத்தி, மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு நிர்வாகத்தைத் திறம்பட நடத்த வேண்டும். உள்கட்சிப் பூசலால் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்த்து மக்கள் பிரச்சினையில் தமிழக அரசு முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஜப்பானை நிர்மூலம் ஆக்குவோம்: வடகொரியாவின் நேரடி மிரட்டல்

பியாங்யோங், ஒக்.12

அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு மூன்றாம் உலகப் போருக்கு ஜப்பான் தயாரானால் அந்த நாட்டைத் தவிடு பொடியாக்கி விடுவோம் என்று வடகொரியா எச்சரித்துள்ளது.

வடகொரியா சமீபத்தில் 6 ஆவது தடவையாக அணுகுண்டுச்சோதனைநடத்தியது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா முயற்சியால் ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

அதன் பிறகாவது வடகொரியா ஏவுகணை சோதனைகள் மற்றும் அணுஆயுத சோதனையை நிறுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வடகொரியா தன்நிலையில்

இருந்து மாறவில்லை. மாறாக, கடந்த மாதம் மீண்டும் ஓர் ஏவுகணையை வீசி சோதனை நடத்தியது.

வடகொரியாவின் இந்த அத்துமீறலைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை அவசரமாகக் கூடியது.

இந்தக் கூட்டத்தின்போது பாதுகாப்புச் சபையில் உள்ள 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் வடகொரியாவின் போக்குக்குக் கண்டனம் தெரிவித்தனர். வடகொரியா மீது மேலும் சில புதிய தடைகளையும் அமெரிக்கா விதித்தது.

வடகொரியாவுடன் இனி அமைதிப் பேச்சு நடத்துவதில் பயனில்லை. தகுந்த வழியில் பாடம் கற்பிக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு ஜப்பான் போருக்குத் தயாரானால் அந்த நாட்டை தவிடு பொடியாக்கி விடுவோம் என்று வடகொரியா நேற்று எச்சரித்துள்ளது. இதுதொடர்பாக, வடகொரியா அரசுக்கு ஆதரவான செய்தி நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறியவை வருமாறு:-

அமெரிக்காவின் போர்த் தரகு வேலைகளை ஜப்பான் சாதகப்படுத்திக்கொள்ள முயற்சித்தால் ஜப்பான் வெற்றிபெற முடியாது. வடகொரியா படைகளின் தாக்குதல்களை ஜப்பானால் எதிர்கொள்ள முடியாது.

கொரிய தீபகற்பத்தில் போர் வெடித்தால் ஜப்பானால் ஒருபோதும் பாதுகாப்பாக இருக்க முடியாது. போருக்காக அங்கு நிலைநிறுத்தப்படும் (குவாம் தீவில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம் உட்பட) அனைத்தும் தவிடு பொடியாக்கி விடுவோம். அமெரிக்காவின் ஆதரவு என்ற பலத்துடன் போருக்கான ஆயத்தத்தில் ஜப்பான் ஆட்சியாளர்கள் இறங்கினால் மீளமுடியாத துரதிர்ஷ்டத்தைச் சந்திக்க நேரிடும் என்பதைக் கடுமையாக எச்சரிக்க விரும்புகிறோம் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான ஐ.எஸ்.சினர் சரண்

பக்தாத், ஒக்.12

ஈராக் நாட்டின் வடக்கு பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் கடந்த வாரம் சரணடைந்துள்ளனர் என குர்து படையினர் தெரிவித்துள்ளனர்.

சிரியா மற்றும் ஈராக்கின் வடக்குப் பகுதிகளில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். இயக்கத்தினர் தற்போது தங்களது செல்வாக்கை இழந்துவருகின்றனர். அரசுப் படையினரின் தாக்குதலால் பெரும் இழப்பைச் சந்தித்துள்ள ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்த தீவிரவாதிகள் குறுகிய இடத்தில் சிக்கித் தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பல நூற்றுக்கணக்கானவர்கள் கடந்தவாரம் குர்து படையினரிடம் சரணடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சரணடைந்த அனைவரும் தீவிரவாதிகளா? என்று தெரியவில்லை. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளாக இருக்கலாம் என்றும் குர்து படையினர் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியாவில் காட்டுத்தீ; சாவு எண்ணிக்கை 15 ஆனது!

ஒரு லட்சத்து 75 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்

கலிபோர்னியா, ஒக்.12

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 8 நகரங்களில் எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீயில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், ஒரு லட்சத்து 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத் தீ பரவி வருகிறது. அங்குள்ள நபா, சோனோமா, யுபா, மென்டோசினோ உள்ளிட்ட 8 நகரங்களில் காட்டுத் தீ எரிகிறது.

எனவே, வனப் பகுதிகளை ஒட்டி தங்கியிருக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு நாள்களில் மட்டும் தொடர்ந்து 14 காட்டுத் தீ பரவல்கள் அந்த மாகாணத்தில் ஏற்பட்டுள்ளது.

திடீர் என்று ஏற்பட்ட இந்தக் காட்டுத் தீ, தற்போது கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பரவி வருகின்றது.

தீயை அணைக்கும் பணியில் ஏராளமான தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காற்று வேகமாக வீசுவதால் தீ பரவுவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

எனவே, 2 ஆயிரம் கட்டடங்கள் மற்றும் வீடுகள் தீயில் எரிந்து சேதம் அடைந்துள்ளன. இந்தத் தீவிபத்தால் இதுவரை ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் கலிபோர்னியாவை விட்டு வெளியேறி இருக்கின்றனர். அது மட்டும் இல்லாமல் 15 பேர் தீக்கு இரையாகி பலியாகியுள்ளனர்.

(ப)

வடகொரியாவின் கப்பல்களுக்கு ஐ.நா. சபையின் தடை உத்தரவு

நியூயோர்க், ஒக்.12

வடகொரியாவின் 4 கப்பல்களும் உலக நாடுகளின் எந்தத் துறைமுகத்துக்கும் செல்லக் கூடாது என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்றுமுன்தினம் புதியதொரு தடையை விதித்தது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை விதித்த பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் மீறி தொடர்ந்து வடகொரியா அணுஆயுத சோதனையில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த மாதம் கண்டம் விட்டுக் கண்

டம் பாய்ந்து சென்று இலக்கைத் தாக்கி அழிக்கும் அதி நவீன ஏவுகணைச் சோதனையையும் வெற்றிகரமாக நடத்தியது.

இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது. வடகொரியா மீது மிகக் கடுமையான தடைகளை விதிக்க வேண்டும் எனவும் வற்புறுத்தியது.

இந்தநிலையில், ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்றுமுன்தினம் வடகொரியா மீது புதியதொரு தடையை விதித்தது.

அந்த நாட்டின் பெற்றோல் 8, ஹாவோ பான் 6, டோங் சான் 2, ஜி சுன் ஆகிய 4 கப்பல்களும் உலக நாடுகளின் எந்தத் துறைமுகத்துக்கும் செல்லக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் வடகொரியாவுக்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கும் சீனா மட்டும் அல்ல எந்த நாடும் தனது துறைமுகத்தில் இந்த 4 கப்பல்களையும் நிறுத்த அனுமதிக்க இயலாது.

இதுபோல் ஐ.நாவின் விதிமுறை மீறியதற்காக குறிப்பிட்ட ஒரு நாட்டின் கப்பல்களை உலக நாடுகளின் துறைமுகங்களுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒருங்கிணைப்பாளர் ஹூயூஜ் கிரிபித்ஸ் தெரிவித்துள்ளார்.

கபடிப் போட்டியில் தேசிய சம்பியனாகத் தெரிவாகி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்ட நெல்லியடி மத்திய கல்லூரி மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வில்...



சர்வதேச மட்டங்களிலும் சிலாகித்துப் பேசப்படுமளவுக்கு

விளையாட்டு வீரர்களை நாம் உருவாக்க வேண்டும்

கணேஷ்வரன் வேலாயுதம் தெரிவிப்பு

எமது பாரம்பரிய விளையாட்டுகளின் பெருமை பற்றி தேசிய ரீதியாகவும் மற்றும் சர்வதேச மட்டங்களிலும் சிலாகித்துப் பேசப்படுமளவுக்கு எமது விளையாட்டு வீரர்களை நாங்கள் உருவாக்க வேண்டும்.

- இவ்வாறு சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநரும் ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஷ்வரன் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

அகிலஇலங்கைபாடசாலைகளுக்கு இடையே கொழும்பில் நடைபெற்ற 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடி இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று தேசிய சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இதன் மூலம் வடக்கு மாகாணத்துக்குப் பெருமைசேர்த்துள்ளஅணி வீராங்கனைகளை வரவேற்கும் வகையில் நெல்லியடி பாடசாலை மற்றும் மக்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் சி. கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநரும் ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஷ்வரன் வேலாயுதம் இவ்வாறு இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

நான் பிறந்து வளர்ந்த மண்ணிலுள்ள மாணவிகள் விளையாட்டுத் துறையில் சாதனை படைத்துள்ளார்கள் என்பது எமது மண்ணுக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது.தமிழினம் எதற்கும் சளைத்த இனமல்ல. தமிழ் மாணவிகளின் இத்தகைய தொடர் வெற்றிகள் மண்ணுக்கும்மக்களுக்கும்பெருமை சேர்ப்பதாக இருக்கின்றன. அவர்களை நாம் மேலும் வலுவூட்டி அகில இலங்கை மட்டம் மாத்திரம் அல்லாது சர்வதேசரீதியாகவும்போட்டிகளில் பங்குபற்றி அவர்கள் சாதனைகளைநிலைநாட்டவழிவகுக்க வேண்டும். மாணவர்களை சிறந்தமுறையில்வழிப்படுத்தி பயிற்சிஅளித்தஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில்தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைகின்றேன்.

இந்த மாணவ வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக எந்தவிதமான வளங்களுமின்றி கஷ்டத்தை எதிர்நோக்கி வந்தனர். இந்த அவல நிலையை அறிந்து போட்டிகளுக்குஎனபோசாக்கு உணவு இவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக வும் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவீனங்களுக்காக ஒரு லட்சம் ரூபாவை பாடசாலை அதிபர் சி.கிருஷ்ணகுமாரிடம் வழங்கியுள்ளேன். இவை தவிர, விளையாட்டுத்துறை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களுக்கும் எம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றோம்.

இத்துடன், இந்த விளையாட்டு நின்றுவிடாது மாணவர்கள் தொடர் வெற்றிகளைப் பெறவேண்டும்என்பது எல்லோருடைய எதிர்பார்ப்பாகும். இந்தியாவில் கபடிவிளையாட்டுத்துறைக்கு பெரிய வரவேற்பு இருக்கின்றது. எனவே, இவர்களுக்குத் தேவையான அணைத்துவசதிகளையும்உதவிகளையும்சிவன்அறக்கட்டளை நிறுவனம் தொடர்ந்து மேற்கொள்ளும். மேலும் மாணவர்களின் ஊட்ட சக்திக்கான போசாக்கு உணவுகளையும் ஏனையஉதவிகளையும்வழங்கி விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக வலுச் சேர்த்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-18)

நியூ வாரியஸ் அணி வெற்றி

(கங்கா)

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

48 அணிகள் பங்குபற்றுகின்ற இந்தச் சுற்றுப்போட்டியில், தற்போது முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றன.

9 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் நியூவாரியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் நியூவாரியஸ் அணி 4:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (ப)

தில்ருவானின் அதிரடி சுழலினால் டெஸ்ட் இலங்கை வசம்

நேற்றுமுன்தினம் ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாய் நகரில் நடைபெற்று முடிந்திருக்கும் இலங்கை மற்றும் பாகிஸ் தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 68 ஓட்டங்களால் பாகிஸ் தானை இலங்கை வீழ்த்தியுள்ளது டன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரையும் 2:0 என வெள் ளையடித்துக் கைப்பற்றியுள்ளது.

பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியின் நான்காம் நாள் நிறைவில், இலங்கை அணியால் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப் பட்ட 317 ஓட்டங்களைப் பெறத் தமது இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்திருந்த பாகிஸ்தான் அணி 73 ஓவர்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றி ருந்தது.

போட்டியின் நான்காம் நாளில் தமது அணியை உயிர்ப்பாக வைத்தி ருக்க சிறந்த இணைப்பாட்டம் ஒன்றை வழங்கிய பாகிஸ்தானின் அணித் தலைவர் சர்பராஸ் அஹ்மட் 57 ஓட் டங்களுடனும் அசாத் சபீக் 86 ஓட் டங்களுடனும் களத்தில் ஆட்டமிழக் காது இருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற மேலதிகமாக 119 ஓட்டங்கள் தேவைப் பட்ட நிலையில், பாகிஸ்தான் ஆட் டத்தின் தீர்மானமிக்க இறுதி நாளில் தமது இரண்டாம் இன்னிங்ஸைத் தொடர்ந்தது.

பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் ஆரம்பத்தில் விரைந்து ஓட்டங் களைச் சேர்த்து சவாலான இலக்கை அடைய முயற்சி செய்திருந்தது. எனி னும், போட்டியின் 79 ஆவது ஓவரில் தனது சிறப்பான சுழல் மூலம் தில் ருவான் பெரேரா பாகிஸ்தான் அணிக் குத் தடுப்பு ஒன்றை போட்டிருந்தார்.

பெரேராவின் ஓவரில் பௌண்டரி ஒன்றை எதிர்பார்த்து சர்பராஸ் அஹ் மட்டால் அடிக்கப்பட்ட பந்து நுவன் பிரதீப்பால் அழகிய முறையில் பிடி யெடுக்கப்பட்டது. இதனால், நேற்று முன்தினம் முதல் விக்கெட்டாகவும் பாகிஸ்தானின் ஆறாவது விக்கெட் டாகவும் அணித்தலைவர் சர்பராஸ் அஹ்மட் ஓய்வறை திரும்ப வேண்டி ஏற்பட்டது. சர்பராஸ், ஆட்டமிழக்கும் போதுதனது 14ஆவது டெஸ்ட் அரைச் சதத்துடன் மொத்தமாக 130 பந்து களில் 5 பௌண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களைக் குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் சர்பராஸ் அஹ்மட்டின் இந்த விக்கெட்டோடு டெஸ்ட் போட்டி களில் இலங்கை அணிக்கெதிராக பாகிஸ்தான் வீரர்கள் ஆறாவது விக் கெட்டுக்காகப் பதிந்த அதிகூடிய

இணைப்பாட்டமும் (173) முடிவுக்கு வந்தது.

பாகிஸ்தானின் பெரும் நம்பிக்கை யாகக் காணப்பட்ட இந்த இரண்டு வீரர்களினதும் இணைப்பாட்டம் நிறை வுக்கு வரப் பெரும் அழுத்தங்களுடன் அந்த அணியினர் தொடர்ந்து துடுப்பா டத் தொடங்கினர். எனினும், பாகிஸ்தான் அணிக்கு களத்தில் நின்ற அசாத் சபீக் தனது 11 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்து இறுதி நம்பிக்கையாகக் காணப்பட்டிருந்தார்.

இவ்வாறானதொரு தருணத்தில் இலங்கை அணிக்கு மீண்டும் ஒரு விக் கெட்டைக் கைப்பற்றி தில்ருவான் பெரேரா பெறுமதி சேர்த்திருந்தார். இந்த இன்னிங்ஸின் 80 ஆவது ஓவ ரின் பின்னர் எடுக்கப்பட்ட புதியபந்து மூலம் இம்முறை தில்ருவான் பெரேரா வால்மொஹமட் அமீர் 4 ஓட்டங்களுடன் ஓய்வறை நோக்கி அனுப்பப்பட்டிருந் தார். பாகிஸ்தான் இந்த ஆட்டமிழப்புக்கு மூன்றாம் நடுவரின் உதவியை நாடி யிருந்த போதும் அது கைகொடுத் திருக்கவில்லை.

அவரை அடுத்து அசாத் சபீக்குடன் பின்வரிசை துடுப்பாட்ட வீரரான யாசிர் சாஹ் சிறிது நேரம் போராட்டத்தை வெளிப்படுத்த முயன்றிருந்தார். எனி னும், சுழல் வீரர் ரங்கன ஹேரத்தைத் தாண்டி அவரால் போராட்டத்தைக் காண்பிக்க முடியாது போனது.

பாகிஸ்தானின் இறுதி நம்பிக்கை யாகக் காணப்பட்ட அசாத் சபீக்கும் சுரங்க லக்மால் மூலம் வீழ்த்தப்பட முடிவில், 90.2 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்த பாகிஸ்தான் 248 ஓட்டங்களை மாத் திரம் பெற்றுத் தம்முடைய இரண்டாம் இன் னிங் ஸில் இலங் கை யிடம் தோல்வியைத் தழுவியது.

தாம் பங்குபற்றிய முதலாவது பக லிரவு டெஸ்ட் போட்டியில் கிடைத்த வெற்றி மூலம் பாகிஸ்தானின் இரண் டாம் தாயகமாக கருதப்படும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் டெஸ்ட் தொட ரொன்றில் பாகிஸ்தானை வீழ்த்திய முதலாவது அணியாக இலங்கை அரிய சாதனை ஒன்றையும் பதிவு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணியின் துடுப்பாட் டத்தில் போராட்டத்தை காட்டியிருந்த அசாத் சபீக், 176 பந்துகளுக்கு 10 பௌண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இலங்கை அணியின் பந்து வீச் சில் தில்ருவான் பெரேரா மொத்தமாக 98 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்க ளைக் கைப்பற்றியமையோடு, ரங்கன ஹேரத்தும் இரண்டு விக்கெட்டுக் களை சாய்த்து தமது அணி பிரபல்ய மான வெற்றியொன்றை அடையப் பங்காற்றியிருந்தார்.

போட்டியின் ஆட்ட நாயகன் விரு தும் தொடர் நாயகன் விருதும் முதலாம் இன்னிங்ஸில் சிறப்பான துடுப்பாட் டத்தை வெளிப்படுத்திய திமுத் கரு ணாரத்னவுக்கு வழங்கப்பட்டன.

இலங்கை அணியினர் தமது ஐக்கிய அரபு இராச்சிய சுற்றுப் பயணத்தில் அடுத்த கட்டமாக ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ் தானுடன் மோதுகின்றனர். முதல் போட்டி நாளை இதே மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

(ப)

ரங்கண ஹேரத் விரும்பும் காலம் வரை தனது பாணியில் விளையாட வேண்டும்

ரிச்சர்ட் ஹார்ட்லி தெரிவிப்பு

இலங்கை அணியின் இடது கை சுழல் ஜாம்பவான் ரங்கன ஹேரத், தான் விரும்பும் காலம் வரைகிரிக்கெட் உலகில் இன்னும் நீண்ட காலம் விளையாட வேண் டும் என டெஸ்ட் கிரிக்கெட் உல கில் 400 விக்கெட்டுக்களை எடுத்த முதல் வீரரான சேர் ரிச்சர்ட் ஹார்ட்லி தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் இடம்பெற்ற பாகிஸ்தான் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் போது ஹேரத் தனது 39 ஆவது வயதில் 400 விக்கெட்டுக்களைப் பெற்று கிரிக்கெட் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றார். இதன் போது இந்தச் சாதனையைப் புரிந்த நியூசிலாந்து வீரர் ரிச்சர்ட் ஹார்ட்லியை விட அதிக வயதில் இந்தச்சாதனையைப் புரிந்த முதல் வீரர் என்ற பெருமையையும் ஹேரத் தனதாக்கியமை குறிப் பிடத்தக்கது.

இந்த நிலையில், சேர் ரிச்சர்ட் ஹார்ட்லி ரங்கன ஹேரத் தொடர் பாகக் கருத்துத் தெரிவிக்கையில், விளையாட்டு மீதான விருப்பு குறையும் போதே வயது ஒரு தடையாக அமையும். மேலும் வீரரின் உடல் தகுதி காயங்கள் வலிகளால் சவாலுக்கு உள்ளா கும் போது விளையாட்டின் மீதான விருப்புக் குறையும்.

நான் 400 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வயதான வீரர் என் பதை ஒரு பெருமையாகவோ அல் லது ஒரு சாதனையாகவோ கருத வில்லை. அது எனது 18 வருடகால கிரிக்கெட் அனுபவத்தின் உச்சமா கவே கருதுகிறேன். என் வாழ்வின் உச்சக் கட்ட அந்தப் பெறுபேற்றை நான் அடைந்தமை 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆகும். ஒருவரின் விளை யாட்டு வெளிப்பாடு சிறந்த நிலை யில் இல்லாதுவிடின் அவர் ஓய்வு பெறுவது சிறந்தது.

நான் 39 வயதாக இருக்கும் போதே அந்த நிலைமைக்கு முகம் கொடுத்தேன் இருந்த போதும் நான் எனது இறுதிப் பந்தில் விக் கெட்டைக் கைப்பற்றியதுடன் அப்போட்டியில் மொத்தமாக 5 விக்கெட்டுக்களையும் கைப்பற் றினேன். எனவே, ஹேரத் தான் விரும்பும் காலம் வரை தனது சிறப் பான விளையாட்டைத் தொடர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

சேர் ரிச்சர்ட் ஹார்ட்லி மொத் தமாக 431 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ள ஒரு சிறந்த சாதனை வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகல் கண்டுபிடித்தது.

வல்வெட்டித்துறைக்கடற்பகுதி ஊடாக கேரள கஞ்சா கடத்தப்படுவதாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் இரவு முதல் அப்பிரதேசத்தில் ரோந்து மற்றும் தேடுதல் பணியில் ஈடுபட்ட கடற்படையினரே இந்தக்கஞ்சாப்பொதியைக் கண்டுபிடித்தனர்.

அவற்றை இலங்கைக்குள் கடத்திவருவதற்குமுயன்றவர்கள் கடற்படை ரோந்துக் கப்பல் நெருங்கி வருவதை உணர்ந்து அந்தக் கஞ்சாப் பொதியைக் கடலில் கைவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று கருதப்பட்டது.

நாமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, பிரசன்னரணதுங்க, டலஸ் அழகப்பெரும, சி.பி. ரத்னாயக்க, ஜனக்க வக்கும்புர, காஞ்சன விஜேசேகர ஆகியோர் தங்காலை சிறைச் சாலைக்கு நேற்றுச் சென்றி ருந்தனர்.

அங்கு அவர்கள், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஆறு பேரிடமும் நலம் விசாரித்தனர்.

தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோரை உடனடியாக விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது, ஆனால் அங்கு பணிகளில் இடம் பெற்று வரும் தாமதம் காரணமாகவே இவர்களின் விடுதலையில் தாமதம் நிலவுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் சிறைக்கைதிகள் தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்செய்தியாளர்மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களுக்கு எதிராக வழக்குகளை தொடருமாறும் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிறையில் உள்ள தமிழ் கைதிகள் தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் அமைச்சரவையில் கவனத்திற்கு கொண்டுவந்தாரா என்பது தொடர்பில் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன பின்வருமாறு பதிலளித்தார்:-

15 வருட காலத்திற்கு மேலாக தமிழ்க்கைதிகள் வெறுமனே சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்க்கையின் அரைவாசி காலப்பகுதி வீண்விரயமாக்கப்படுகின்றது. இவர்களை விடுவிக்கவேண்டுமென்று நானும் பலமுறை தெரிவித்துள்ளேன். குற்றமற்றவர்களை தடுத்துவைத்தல் நியாயமற்றதாகும். வழக்கு தொடரப்பட்டுவிடுதலையானவர்களில் - குறிப்பாக ஜே.வி.பி. வன்முறை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு வழக்கின் மூலம் விடுதலையானவர்கள், பலர்கடந்தகாலங்களில்ஜே.வி.பி. வன்முறைகளில் பங்குகொண்டதை நாம் காணக்கூடியதாக இருந்தது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்கள்இவ்வாறானசெயற்பாடுகளில் ஈடுபட்டனர்எனத்தகவல் இல்லை. புனர்வாழ்வளிக்கப்பட்ட மகளிர் தலைவிதமிழினிஎழுதியநூலைப் படித்தால் பலவற்றை நாம் புரிந்துகொள்ளமுடியும் - என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமானபதில்தரப்படாவிட்டால் மைத்திரி வருகைக்கு எதிர்ப்பை வெளியிடுவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் இதனை அவர் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பிணை கோரி உண்ணாவிரதமிருந்த விமல் வீரவன்ஸவிற்கு பிணை வழங்கப்படுகின்றது. ஆனால் தமது வழக்குகளை மீள வவுனியா மேல்நீதிமன்றிற்கு மாற்ற அரசியல் கைதிகளால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன.

வித்தியா கொலை வழக்கின் நீதிபதிகளுள் ஒருவரான இளஞ்செழியன் கொலை முயற்சிக்குள்ளானார். அதற்காக அவ்வழக்கு கொழும்பிற்கு மாற்றப்படவும் இல்லை; நீதிபதிகள் தப்பி ஓடவுமில்லை.

இப்போது சாட்சியொருவருக்காக வழக்கை வவுனியா மேல் நீதிமன்றிலிருந்து அனுராதபுரம் மேல்நீதிமன்றிற்கு மாற்றுவது நியாயமானதல்ல.

அரசியல்கைதிகள் 16ஆவது நாளைத் தாண்டி உண்ணாவிரதமிருக்கின்ற நிலையில் அவர்களது குடும்பங்கள் சிறைக்கு வெளியே உண்ணாவிரதமிருக்கின்றன. கைதிகளது உடல்நிலை மோசமடைந்துவருகின்றது. சிறுநீரகங்கள் செயலிழந்துள்ளன.

எமது கட்சியைப் பொறுத்தவரையினில் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுவிக்கப்படவேண்டுமென்பதே நிலைப்பாடாகும்.

கூட்டமைப்பு இலங்கை அரசுடன் கள்ள உறவைப்பேணுகின்றது. மக்கள் பிரதிநிதிகள் என்போர் தமது நலன்களைப் பேணப் பாடுபடுகின்றனரென வும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே கல்வி அமைச்சின் சார்பில் நடைபெறும் தமிழ் தின விழாவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால வருகின்றார். ஆனால் வடமாகாணக் கல்வி அமைச்சரோ அமைதியாகவிருக்கின்றாரே? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர் கல்வி அமைச்சரது மௌனம் வருத்தத்திற்குரியது - என்றார்.

யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்நிகழ்வாக புத்தூர் நிலாவரை கமநலசேவை திணைக்களத்தில் நடைபெறும் தேசிய வேலைத்திட்டத்தின் அங்கமாக விவசாயிகளுக்குவிதைபொருள்கள் வழங்கி வைப்பார்.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் தொழில்நுட்பதுறைக்கான மூன்று மாடிக் கட்டடத்தை அவர் திறந்து வைக்கவுள்ளார்.

பின்னர் இந்துக் கல்லூரியில் தேநீர் உபசாரத்தில் கலந்து கொள்ளவுள்ள ஜனாதிபதி, இந்துக் கல்லூரியில் தேசிய தமிழ் மொழித்தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அன்றையதினம் மதியம் 2 மணிக்குகிளிநொச்சியில்அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தையும் அவர் திறந்து வைக்கவுள்ளார்.

தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 வருடங்களுக்கு மேலதிகமாகச் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

10 வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய தேசிய பாடசாலை ஆசிரியர்கள் சுமார் 12 ஆயிரம் பேர் உள்ளனர் என, முதல் கட்டமாக உயர்தரத்தில் கற்பிக்கும் 3 ஆயிரம் ஆசிரியர்கள் இன்று இடமாற்றப்படவுள்ளனர் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் சாரதிகள் நேற்று நள்ளிரவு முதலே பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவிருந்தனர் எனக் கூறப்பட்டது. ஆனால் நேற்று மாலையே அவர்கள் பணிப்புறக்கணிப்பில் குதித்தனர்.

அதனால் ரயில் சேவைகள் திடீரென செயலிழந்தன. அசௌகரியத்துக்கு உள்ளான பயணிகள் பெரும் அமளியில் ஈடுபட்டனர். (உ)

யோகேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரத்தில் யோகேஸ்வரன் எம்.பியின் பாதுகாவலரான பொலிஸார் ஒருவர் தலையில் காயமடைந்தார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கூறப்படுபவை வருமாறு:-

நேற்றுப்பிற்பகல் 3.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் அலுவலகத்திற்கு தனது மனைவியுடன் சென்ற மட்டக்களப்பு மாவட்ட காணி உதவி ஆணையாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தன் மீது அவதூறு தெரிவித்து வருகிறார் எனவும் ஏன் அவ்வாறு தெரிவித்துவருகின்றார்கள் என்றும் கேட்டுள்ளார்.

அதன்போது, "உங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக செய்தி வெளியானதுபோது உங்களுக்கு ஆதரவாகப்போராட்டங்களை நடாத்தினேன். ஆனால் நீங்கள் சூடுபட்டமை தொடர்பில் பல்வேறு விதமான கருத்துகள் வெளிவந்தன. அது தொடர்பிலேயே நான் மாவட்ட செயலகத்திற்கு சென்று அன்றைய மாவட்டசெயலாளரிடம்உண்மை நிலைமை தொடர்பில் கேட்டேன் என்று யோகேஸ்வரன் கூறியுள்ளார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் காணி ஆணையாளருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. தம்மை காணி ஆணையாளர் தாக்க முற்பட்டார் எனவும் அதனைத் தடுக்க முனைந்த பொலிஸார் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட உதவி காணி ஆணையாளரிடம்கேட்டபோது, தன்னைப் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவதூறான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றார் எனவும் அது தொடர்பில் உண்மை நிலையை அறியச் சென்றபோது பொலிஸார் வந்து தன்னைத் தாக்கமுற்பட்டனர் எனவும் தெரிவித்தார்.

''என்னைப்பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்து வரும் கருத்துகள் தொடர்பில் நான் தெளிவுபடுத்தவே சென்றேன்" என்று கூறிய அவர், "தமிழ் மக்களின்பிரதிநிதிகளிடம்சென்று எங்களது கருத்துகளை பகிர்வதற்கான சுதந்திரம்கூட இல்லையா". எனவும் கேள்வியெழுப்பினார். (உ)

இரத்தோட்டைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்றுக் கைது

இரத்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்எனப்பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரத்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யான கபில திசாநாயக்க என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், உடதும்பரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றின் பேரில் வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸ் விசேட ஆய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணையின்போது இவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதுடன், விசாரணை முடிவில் அவர் கைது செய்யப்பட்டார்.

இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் விஞ்ஞானத்துறை தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், ஊடகத்துறை விரிவுரையாளர் கலாநிதி ரகுராம், சட்டத்துறை விரிவுரையாளர் கலாநிதி குமாரவேல் குருபரன் ஆகியோர் பொதுமக்களின் கேள்விகளுக்கு விளக்கமளித்தனர்.

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை மீறாமல் வடக்கு, கிழக்குமக்கள்,தங்கள்சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான வாக் கெடுப்பைக் கோர முடியும் எனகலாநிதிகுமாரவேல்குருபரன் தெரிவித்தார். குறிப்பாக தனிநாட்டுக்கான வாக்கெடுப்பு என்று கூறாமல், மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி ஒருமித்த குரலோடு எடுத்துக் காட்டுவதற்கான வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கற்றலோனி, குர்திஸ்தான் மக்கள் சுதந்திர தாயகத்தை மீட்டெடுப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியமை போன்று தமிழர்களும் அவ்வாறான வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முடியுமா என எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

அதேவேளை ஒற்றையாட்சிக்குள்சமஷ்டிஎன்பதுகிடையாது. ஆனால்தமிழரசுக்கட்சிஅவ்வாறு கூறுவதாகவும் இடைக்கால அறிக்கையில் இனப்பிரச்சினை தீர்வுக்கான பிரத்தியேகமான அம்சம் எதுவும் இல்லை என்றும் குருபரன் மேலும் கூறினார். ஒற்றையாட்சியைத்தான் இடைக்கால அறிக்கை தாங்கி நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சி சுயாட்சி என்ற கோட்பாட்டை கைவிட்டுள்ளது என்று கலாநிதி கணேசலிங்கம் தெரிவித்தார். இடைக்கால அறிக்கையை அடியோடி நிராகரிக்க வேண்டும் என்றும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பிரத்தியேகமான முறையில் தமிழர்களுடன்பேசிவரைவைதயாரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆனால் தமிழரசுக் கட்சியுடன் கூட பேச்சுக்கள் நடத்தப்பட வில்லை என்றும்தமிழர்களுடன் தனித்துவமான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே செய்ய வேண்டும் என்றும் கலாநிதி கணேசலிங்கம் கூறினார்.

இடைக்கால அறிக்கை வெறுமனே பரிந்துரை மாத்திரமே. அந்த விதப்புரைகளில் கூட பல விடயங்களில் அரசாங்கம்உடன்படவில்லை என்று கலாநிதி ரகுராம் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாட்டை விமர்சித்தரகுராம், இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் ஒவ்வொன்றையும் விரிவாக அலசி ஆராய்ந்தார்.

ஒவ்வொரு கட்சிகள் மற்றும் பொதுஅமைப்புகளின்யோசனைகள் மாத்திரமே இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. அவை நகல் சட்டமூலம் அல்ல என்று ரகுராம், விளக்கமளிக்கும்போது கூறினார்.

இங்கு கேள்வி எழுப்பிய பொது மக்கள், நல்லாட்சி அரசாங்கத்தின்செயற்பாடுகளை விமர்சித்தனர் எனவும் தமிழரசுக் கட்சி மீது குற்றம் சுமத்தினர் என ஐ.பி.சி.தமிழ் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

சுமார் இரண்டு மணித்தியாலமாக இடம்பெற்றகருத்தரங்கில் பல்துறைசார்ந்தவர்களும்கலந்து கொண்டனர்.

பொலிஸாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை சேனாதிராசா குற்றம் சுமத்தியுள்ளார்.

சூரியாஅமைப்பின்ஏற்பாட்டில் சிங்களை மொழிக் கற்கையைப் பூர்த்திசெய்ய மாணவர்களுக்குசான்றிதழ்வழங்கிவைக்கும் நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

போருக்குப் பின்னர் வடமாகாணத்தில் போதைப்பொருள் கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இதனால் எமது மாணவ சமுதாயம்போதைப்பொருளுக்கு அடிமைப்பட்டு வருகின்றது.

சில பேரினவாதச் சக்திகள் எமது சமுதாயத்தை திட்டமிட்டு அழித்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாகவே போதைப் பொருள் பாவனையால் எமது மண் அழிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இந்த நாட்டில் மது பாவனை அதிகமுள்ள இடமாகவும்யாழ்.மண்ணேதிகழ்கின்றது. விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் எமது மண் ஒழுக்கமாகவும், கட்டுப்பாடாகவும் இருந்தது.

ஆனால்அவர்கள்இல்லாமல் போன பின்னர் எமது மண் சிதைக்கப்பட்டு வருகின்றது. இதனால் மாணவ சமுதாயம் போதைமற்றும்மதுவுக்குஅடிமையாகி வருகின்றது - எனத் தெரிவித்தார் அவர்.

பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் போது இலங்கையில் சுமார் 15,000 பாலியல் தொழிலாளர்களும், பத்தாயிரம் ஓரினச் சேர்க்கையாளர்களும்உள்ளனர்எனக் கண்டறியப்பட்டது.

எச்.ஐ.வி. தடுப்புதிட்டங்களை அமுல்படுத்தும் போது இந்த புள்ளிவிவரத்தகவல்கள் மிகவும் அவசியமானவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோயை ஐந்து ஆண்டுகளில் இல்லாதொழிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக தேசிய பால் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் டக்டர் சிசிர லியனகே ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (உ)

இயலாமைக்காக நாங்கள் அமைதியாக இருக்கவில்லை

கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 12

இயலாமைக்காக நாம் அமைதியாக இருக்கவில்லை. தற்போது நாட்டுக்குள் இஸ்ரேலின் மொசாட் புலனாய்வுப்பிரிவு, இந்தியாவின் றோ பிரிவு, அமெரிக்க புலனாய்வுப் பிரிவு, சீன மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பலமான பிரிவுகளும் உட்புகுந்துள்ளன.

இதனால், பெரியளவில் விளைவுகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே பொறுமையாக உள்ளோம் எனப் பொது பலசேனாவின் பொதுச்செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் ஹெலிக் கொப்டரில் கிழக்குக்குச் சென்றுள்ளார். இவ்வாறு ஹெலிக் கொப்டரில் செல்வதற்கு இவருக்கு அதிகாரம் உள்ளதா? யார் அதிகாரம் வழங்கினர்?

அத்துடன், அரபு மொழி மற்றும் ஆங்கில மொழி உள்ளடங்கிய பெயர்ப்பலகையும் அங்கு திறந்து வைக்கப்பட்டது. எனினும், இதன்போது சிங்கள மொழியில் பெயரிடப்படவில்லை. ஏன் சிங்கள மொழியில் பெயரிடவில்லை? சிங்கள மொழியை விடுத்து தமிழ்மொழி கூட அதில் இருக்கவில்லை.

இது நாட்டின் மொழிக் கொள்கையை மீறும் செயலாகும். சிறுபான்மையினரே இனவாதத்தைத் தூண்டுகின்றனர். எனினும், பிரதான அமைச்சுகளை முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளனர். இவர்களுக்குக் கொள்கை ஒன்றும் இல்லை. அமைச்சுப் பதவிகளை வகித்து இவர்கள் நாட்டின் கொள்கைக்கு கட்டுப்படுவதில்லை. தற்போது நாமாகப் பிரச்சினையைத் தூண்டுகின்றோம்?

சாதாரண முஸ்லிம் மக்களுடன் எமக்குப் பிரச்சினை இல்லை. முஸ்லிம் அரசியல் வாதிகளே பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றனர். எமக்கு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் நோக்கம் கிடையாது. ஒரு நாடு, ஒரு கொள்கையின் கீழ் வாழ வேண்டும். இதுவே, எமது நோக்கமாகும். ஆனால், சிறுபான்மையினர் உணவு உள்ளிட்ட அனைத்திலும் வேறுபட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவே புதிய அரசமைப்பு கொண்டு வர வேண்டும். வில்பத்து பிரச்சினையை நாமே சமூகமயப்படுத்தினோம். வில்பத்து பிரச்சினைக்கு எதிராக போராட்டங்கள் மாத்திரமே நடத்தப்படுகின்றன. எனினும், பொறுப்பு வாய்ந்தவர்களிடம் கொண்டு செல்லப்படுவதில்லை. வில் பத்துவை பாதுகாக்கமுப்படையினரைபணிக்கு அமர்த்துவதாக ஜனாதிபதி கூறினாலும் இதுவரை அது நடக்கவில்லை.

மாணிக்கமடுவில் இன்னும் எமக்கு விகாரை அமைக்க முடியாமல் போயுள்ளது. மட்டக்களப்பு, மன்னார் சென்று பாருங்கள். ஹிஸ்புல்லாஹ், ரிஷாட்பதியுதீன்உள்ளிட்டோர் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்களுக்கு தொடர்ந்து நாடகமாட இடமளிப்பது பாதிப்பாகும். இது தொடர்பில் நாம் யாரிடம் சென்று முறையிடுவது? ரிஷாத்பதியுதீனுக்கு உள்ள அதிகாரம் மொனராகலை விஜித் விஜயமுனி சொய்சாவுக்கு வழங்கப்பட்டுள்ளதா? அம்பாறை தயாகமகேவுக்கு வழங்கப்பட்டுள்ளதா? எனினும் ரிஷாட் பதியுதீன் தனது காரியங்களை தங்கு தடையின்றி முன்னெடுத்து வருகின்றார்.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு நாம் அமைதியாக இருப்பது இயலாமையால் அல்ல. இந்தியாவின் றோ, இஸ்ரேலின் மொசாட், சீன, அமெரிக்க, ஐரோப்பிய புலனாய்வுப்பிரிவினர்நாட்டுக்குள் களமிறங்கியுள்ளனர். இதன் காரணமாகவே அமைதியாக உள்ளோம். அனைத்து பாவங்களையும் எம்மால் சுமக்க முடியாது. இதனால் நாடு ஆபத்தை நோக்கி நகர்ந்த வண்ணம் உள்ளது. இதனால் பெரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

இத்தகைய நிலைமை காரணமாகவே நாம் அமைதியாக உள்ளோம். நாட்டுக்காக அமைதியாக இருக்க வேண்டியுள்ளது. பொறுமையாக உள்ளோம். அனைவரையும் ஒன்றிணைத்து செல்வது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

நாட்டில் தற்போது அரசியல் ரீதியாகப் பல பிரச்சினைகளும் ஆபத்துக்களும் உள்ளன. நாட்டுப் பிரச்சினையைப் பார்க்கிலும் அரசுக்குள் முரண்பாடுகள் அதிகம் உள்ளன. நாட்டில் பிரச்சினை என்ன நடந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் சிலருக்குப் பிரதமர் கனவு உள்ளது. அமைச்சர்களான மங்கள சமர வீர, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட 30 பேர் பிரதமர் கனவுடன் உள்ளனர்.

நாடு குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றது. ஆனால், இவர்கள் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

ஜனாதிபதி தலைமையில் கணக்கியல் நிபுணர்கள் சங்க வருடாந்த மாநாடு!

இலங்கை கணக்கியல் நிபுணர்கள் சங்க வருடாந்த மாநாடு - 2017 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

பத்தரமுல்ல வோர்ற்றஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த மாநாட்டில் 'மாற்றமுறும் சவால்களை வெற்றிகொள்வதற்காக அர்ப்பணித்தல்' எனும் தொனிப்பொருளிலான வருடாந்த மாநாடு 15 ஆவது தடவையாக நடைபெற்றது.

இந்த மாநாட்டின் மூலம் காலத்துக்கேற்ற தொனிப்பொருளுடன், தெரிவுசெய்யப்பட்ட துறைசார் நிபுணர்களின் அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது.

முதன்மைத் துறையான கணக்கியல்சார் தலைப்புக்களுக்கு மேலதிகமாக நவீன தொழில்நுட்பத் தாக்கங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுவது விசேடமானதாகும்.

2016 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வணிகத்துறையில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற நிபுணி தனஞ்சனி ரூபசிங்க எனும் மாணவிக்கான பரிசை ஜனாதிபதி இதன்போது வழங்கினார். நிறுவன அனுசரணையாளர்களுக்கான விருதுகள் மற்றும் பரிசில்களும் வழங்கப்பட்டன. இலங்கை கணக்கியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பட்டய கணக்காளர் ஜே.எம்.யூ.பி. ஜயசேகரவால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

லியோக் கழகம் அங்குரார்ப்பணம்

சுன்னாகம், ஒக்.12

சுன்னாகம் லியோ கழகம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி லியோ கழகம் ஆகியவற்றின் அங்குரார்ப்பணம் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா.தயாரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் பெர்னாண்டோ தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

அமெரிக்க இராஜாங்க செயலாளருடன் நிதி அமைச்சர் மங்கள சமரவீர பேச்சு!

கொழும்பு, ஒக். 12

அமெரிக்க அரசியல் விவகார இராஜாங்க செயலாளரும் தூதுவருமான தோமஸ் செனோனுக்கும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் காத்திரமான பேச்சு ஒன்று இடம்பெற்றுள்ளது.

தற்பொழுது உலக வங்கி மற்றும் IMS நிதியத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம்செய்துள்ள அமைச்சர் மங்கள சமரவீர, தோமஸ் செனோனை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெற்றது. இவர் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

2016 ஆம் ஆண்டு அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகப் பதவி வகித்தார். அதன்போது அமெரிக்க இலங்கை நட்புறவு பேச்சு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பேச்சின் தொடரில் கலந்து கொள்வதற்காகவே தோமஸ் அடுத்த மாதம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைதிகளின் விடுதலைக்காக நல்லூரில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக்.12

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நல்லூரில்நேற்றுக்காலைவிசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றன.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் கற்பூரம் ஏற்றி, தேங்காய் உடைத்து, விசேட பூசை வழிபாட்டில் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஈடுபட்டனர்.

இந்த வழிபாட்டில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (உ)



அம்பிகைபாகனின் சிலை திறப்பு விழா

மக்கள் மனம் கவர்ந்த மருத்துவர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனின் (கடவுள்) திருவுருவச்சிலை திறப்பு விழாவும் 253ஆம் நினைவுநாள் அனுஷ்டிப்பும் நேற்று புதன்கிழமை மாலை 3மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக இடம்பெற்றது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் சி. குமாரவேல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மந்திகை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த. குகதாசன் கலந்து சிறப்பித்தார். மங்கல விளக்கை வைத்தியர் அம்பிகைபாகனின் சகோதரி திருமதி ப. நடராஜா ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். வரவேற்பு உரையை ஓய்வுபெற்ற பிரதி அதிபர் செ. சபாரத்தினம் ஆற்றினார். திருவுருவச் சிலையை முதன்மை விருந்தினர் குகதாசன் திறந்து வைக்க, திரைக்கல் திரையை சாவகச்சேரி நகர சபைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீக்கினார். திருவுருவச் சிலைக்கு மலர் மாலையை S.T.C நிறுவன உரிமையாளர் வை. சிவராசா அணிவித்தார். அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரையை கவிஞர் த. நாகேஸ்வரன் ஆற்றினார். நன்றி உரையை அதிபர் பி. கிரிதரன் ஆற்றினார்.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், சாவகச்சரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வைத்தியர்கள், தாதியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்த உருவச்சிலை சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் செ. சபாரத்தினத்தின் ஏற்பாட்டில் கலாநிதி வைத்திலிங்கம் சிவராசாவின் அனுசரணையில் அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-21)

செங்குந்தா சந்தைக் கட்டடம்; அடிக்கல் நட்டார் சிவஞானம்

கல்வியங்காடு செங்குந்தா சந்தைத் தொகுதியின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை வடக்கு மாகாணசபைஅவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கடந்த வாரம் நாட்டி வைத்துள்ளார்.

யாழ். மாநகர ஆணையாளராக சி.வீ.கே.சிவஞானம் இருந்த போது 2006ஆம் ஆண்டு புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும்நாட்டில்ஏற்பட்டபோர்சூழ்நிலைகள்காரணமாகக்கட்டப்பணிகள்ஆரம்பிக்கபடவில்லை.

சி.வீ.கே.சிவஞானம் யாழ்.மாநகர ஆணையாளராக இருந்த போதும், அதற்குபின்பும்தற்பொழுது வடக்கு மாகாண சபை உறுப்பினராகவந்தபின்பும் தொடர்சியாக செங்குந்தா சந்தை தொகுதியின் புதிய கட்டடப் பணிகளை ஆரம்பிக்குமாறு யாழ்.மாநகர சபையையும், வடக்கு மாகாண முதலமைச்சரையும் தொடர்சியாக வலியுறுத்தி வந்துள்ளார். இதற்கமைய தற்பொழுது புதிய கட்டடத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை ஆணையாளராக சி.வீ.கே. சிவஞானம் இருந்த போது ஏற்கனவே சந்தை தொகுதியின் புதிய கட்டடத் தொகுதி அமைக்கவென யாழ். மாநகர சபையில் ஒதுக்கி வைத்திருந்த 40 லட்சம் ரூபாவுக்கும் சற்று அதிகமான தொகையும் மாநகர சபையின் மேலதிக நிதிப் பங்களிப்புடன் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இந்த அடிக்கல்நாட்டும் நிகழ்வில் யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன், யாழ். மாநகர சபையின் உயர் அதிகாரிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் தகுதிச் சுற்றிலேயே அமெரிக்கா 'அவுட்'

30 ஆண்டுகளில் முதல் முறையாக உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தகுதிச் சுற்றிலேயே அமெரிக்கா தோல்வியடைந்து வெளியேறியது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தகுதிச் சுற்றுப் போட்டியில், டிரினிடாட் – டோபாகோ அணியுடன் அமெரிக்கா தோல்வியை சந்தித்ததாலும், கோஸ்டாரிகாவுடன் நடந்த போட்டியில் பனாமா போட்ட சர்ச்சைக்குரிய கோல் ஒன்றினாலும், 1986 ஆம் ஆண்டில் இருந்து முதல் முறையாக உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தொடர்ந்து விளையாடும் வாய்ப்பை அமெரிக்கா இழந்துள்ளது.

டிரினிடாட்டில் நடந்த போட்டியில் அமெரிக்க அணி நேற்றிரவு ஆடத் தொடங்கியபோது, தமது பிரிவில் மூன்றாவது இடத் திலிருந்தது. அப்போட்டியில் அமெரிக்கா 2 – 1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

இந்த நிலையில், பனாமாவில் நடந்த ஒரு தகுதிச் சுற்றுப் போட்டியில் கோஸ்டா ரிகா–பனாமா அணிகளுக்கு இடையிலான ஒரு போட்டியில், ஆட்டத்தின் 88ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து வெற்றி பெற்றதன் மூலம் உலகக்கோப்பை போட்டியில் விளையாடும் தகுதியை முதல் முறையாகப் பெற்றது பனாமா. அத்துடன், அது தமது பிரிவில் மூன்றாவது இடத்தைப் பிடித்து, அமெரிக்காவை ஐந்தாவது இடத்துக்குத் தள்ளியது.

எனினும், பனாமா அணியை சேர்ந்த கேப்ரியல் டோர்ரஸ் அடித்த பந்து கோல் போஸ்ட் லைனைத் தொடவில்லை என்பதாக சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தக் கோல் குறித்து கோஸ்டா ரிகா புகார் எழுப்பியிருந்தாலும் குவாதிமாலாவைச் சேர்ந்த ஆட்ட நடுவர் வால்டர் லோபெஸ் அதைக் கோல் என்றே அறிவித்தார்.

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், வட, மத்திய அமெரிக்க மற்றும் கரீபியத் தீவுகளுக்கான அணிப் பிரிவில் முன்னிலை வகிக்கும் மெக்ஸிக்கோ அணியை ஏற்கனவே ஹோண்டுராஸ் அணி வீழ்த்தி நான்காவது இடத்தைப் பிடித்ததால், பட்டியலில் அமெரிக்கா ஐந்தாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று, பனாமா அணியை 4–0 என்ற கோல் புள்ளிகளில் அமெரிக்கா வீழ்த்தியபோதும், ஒன்பது போட்டிகளில் விளையாடி அது வெறும் மூன்று புள்ளிகளை மட்டுமே பெற்றிருந்தது. எனவே, டிரினிடாட் மற்றும் டோபாகோவுடன் போட்டியை எதிர்கொள்வதற்கு முன்பு கூட ரஷ்யாவில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் இடம்பெறுவதற்கு நெருக்கத்தில் கூட அமெரிக்கா இருக்கவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.